


தொகுதி - 9 பகுதி - 10

ஆடி - 1 17-7-87

சிவ சிவ

கற்பன ஊழற்றூர் கல்விக் கழகத்தாங்கு
ஒற்கமின் றூத்தைவாய் அங்காத்தல் — மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மின் என்பவே, மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல்.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்.

கற்பதற்கு உரிய நல்லூழ் இல்லாத மூடர்கள், கல்வி கற்றூரது சபையிலே நாவடக்கம் இல்லாமல் தமது தூய்மையற்ற வாயைத் திறப்ப தானது, வைக்கோல் புல்லால் செய்த மனித உருவைக் கண்டு விலங்கும் பறவையும் அஞ்சுவதைப் போலத் தம்முடைய வலிய வடிவைக் கண்டு அஞ்சாதீர்கள் என்று தாமே எடுத்துரைப் பதைப் போலாகும். (ஆங்கு, மற்று என்பன அசை.)

# ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்

சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணசலம்
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 விடையரங்கம்
3 இதமான வாழ்வுக்கு எளியவழிகள்
4 சிவபோகசாரமும் சொக்கநாத வெண்பாவும்
5 திருச்சதகமும் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும்
6 ஆலயபூஜைப் படிக்காசுநிதி
7 வெண்காட்டு முக்குளம்
8 திருநாவுக்கரசரும் காந்தியடிகளும்
9 சாத்தனர் வழிபாடு
10 காளமேகமும் கவிதைத்தாகமும்
11 ஞானமிர்தம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



# பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்

"கயிலைமாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ

## காசிவாசி முத்துக்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

ஓதாதுணர்ந்த பெருஞானியாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தமிழின் பல் துறைகளிலும் நயம்பில்கப் பனுவல்கள் புனைந்தருளினார்கள் என்பது அறிஞர் உலகு அறிந்துள்ள செய்தியாகும். சிதம்பரச் செய்யுள் கோவையின் இருபத்து மூன்றாம் செய்யுளுள் பழந்தமிழிலக்கியங்களின் நுணுக்கம் ஒன்றனைப் புலப்படுத்தும் வகையில் ஒரு செய்தியை அமைத்தருளியுள்ளார்கள். அச்செய்தி வருமாறு.

"ஸ்ரீமந் நடராஜப் பெருமான் தில்லையில் திருநடனம் புரிகிறான். அப்பெருமானின் தோளில் கொன்றை மாலை இலங்குகிறது. அம்மாலையில் வண்டும், சுரும்பும் ஞிமிறும் குடைந்து ஆர்க்கின்றன" என்கிறார்கள்.

"வண்டும் சுரும்பும் ஞிமிறும் குடைந்தார்ப்ப
தண்தேன் இறைக்கும் இதழி நறுங்கண்ணி
எண்தோள் முக்கண்ணான் இமயம் புனைமன்றில்"

என்பது அப்பாடலின் முதற் பகுதியாகும். இப்பகுதியில் உள்ள வண்டு, சுரும்பு, ஞிமிறு என்பன ஒரு பொருட்பன் மொழிகளல்ல. டாக்டர் உ.வே சா. அவர்கள் "வண்டு, சுரும்பு, ஞிமிறு என்பன வண்டின் சாதிகள்" எனக் குறிப்புரை செய்துள்ளார்கள்.

வண்டு:என்னும் சொல்லுக்கு, அம்பு, குற்றம், கைவினை, சங்கு, பூசநாள், அபராதம், அரி, அறுபதம், ஈ, கரும்புள், கழுது, கள்ளுண், காமன், கீடம், கீதம், கேசரம், கேசவம், சஞ்சரிகம், சஞ்சாளிகம், சாரங்கம், சிலீமுகம், சுரும்பு, சூதம், ஞிமிறு, தும்பி, தேன், பிரசம், பிரமரம், பிருங்கம், புண்டரீகம், புள், மதுகரம், மதுபம், மந்தி, மா, மிஞிறு, மொய், வடு, வரி, வரிக்கடை என்று நாற்பத்தொரு பொருள்கள் உள்ளன என்று அகராதிகள் அறிவிக்கின்றன.

இதிலிருந்து வண்டு என்பது அச்சாதியின் பொதுப் பெயர் என அறியலாம். காளை பசு என்ற இரண்டிற்கும் பொதுப் பெயர் மாடு என்பது போலச் சுரும்பு, ஞிமிறு என்ற இரண்டற்கும் பொதுப்பெயர் வண்டு எனக் கொள்ளலாம். மேலே குறிப்பிட்டுள்ள பொருளகராதியுள் சுரும்பு ஞிமிறு என்னும் சொற்களும் அடங்கியிருத்தலைக் காணலாம்.

சுரும்பு என்னும் சொல்லுக்கு ஆண்வண்டு மலைவண்டு என இரு பொருள்களை அகராதிகள் கூறுகின்றன ஞிமிறு என்னும் சொல்லுக்கு வண்டு என்னும் பொருளல்லாமல் வேறு விளக்கம் கிடைக்கவில்லை.

ஆண் வண்டு, சுரும்பு, தும்பி, மதுகரம் என்னும் சொற்களால் குறிக்கப் பெறும் என்றும், பெண் வண்டு தேன் என்னும் சொல்லால் குறிக்கப் பெறும் என்றும் ஜூப்ளி தமிழகராதியின் இரண்டாம் பாகத்துள் குறிக்கப் பெற்றுள்ளது.

"வண்டும், சுரும்பும், ஞிமிறும் குடைந்தார்ப்ப" என்ற தொடரால் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் வண்டு என்பது பொதுப் பெயர் என்பதையும், சுரும்பு என்பது ஆண் வண்டைக் குறிக்கும் சொல் என்பதையும், ஞிமிறு என்பதும் தேன் என்பது போலப் பெண் வண்டைக் குறிக்கும் மற்றொரு சொல் என்பதையும் மன்பதைகள் துய்க்க அறிவித்தருளி யுள்ளார்கள் எனக் கொள்ளலாம்.

இப்படிக்கு உரை கொள்வதால் "துளிதூங்கு தெள் ளமுத வெள்ளருவி" எனத் தொடங்கும் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் அம்புலிப் பருவ எட்டாம் பாடலில்,

"அளிதூங்கு ஞிமிறு எழுந்து ஆர்க்கும் குழல்திருவோ
டம்புலீ ஆடவாவே"

என்னும் பகுதிக்கு ஓர் இனிய விளக்கம் கிடைக்கும். "தோன்றல் இவன் நின்னை ஒவ்வாதிரான்" தோன்றல் இவள் நின்னை ஒத்துளனல் (முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ் அம்புலிப்பருவம்) எனச் சந்திரனை ஆணாகக் கூறிய ஸ்ரீ சுவாமிகள் அம்பிகையின் பேரில் "அளி தூங்கு ஞிமிறு ஆர்க்கிறது" என்றது "வண்டினத்துள்ளும் பெண்வண்டே இவள்பால் ஆர்க்கிறது" தாய்நின்னையழைத் தது பெறலரும்பேறுகும்" எனும் குறிப்பை உள்ளடக்கிக் கூறியதாகும். பிற எவ்விடத்தும் ஞிமிறு என்ற சொல்லை ஸ்ரீ சுவாமிகள் பயன்படுத்தவில்லை.

இனி அப்பாடற் கருத்தைத் துய்ப்போம். மலைவண்டு முதலிய பல்வேறு இனங்களின் ஆண்வண்டுகளும் பெண் வண்டுகளும் ஸ்ரீ மந் நடராஜப் பெருமானின் எட்டுத் தோள்களிலுமுள்ள கொன்றை மலர் மாலை பிலிற்றும் தேனில் தோய்ந்து எழுந்து ஆர்க்கின்றன. இமயம் போலப் பொன்மன்றம் இருக்கிறது. அதிலே முக்கட் பெருமான் நடனம் புரிகிறுன்.

இரண்டு காரணங்களுக்காகப் பெருமான் நடனம் புரிகிருன். (1) அண்டர்கள் கண் களிப்பதற்காக (2) தொண்டர்களின் மனம் குளிர்ச்சி அடைவதற்காக.

பெருமானின் இத்தகு நடனத்தைக் கண்டும் மனம் உருகாமல் இருக்க முடியாது. ஆனல் உலகியலில் பலர் அத்திருநடம் கும்பிடும் பேறு பெற்றிருந்தும் உருகாமல் இருக்கிருர்கள். இதனை ஸ்ரீ சுவாமிகள் அவர்களும் அறிந்து வைத்திருக்கிருர்கள். அவர்களைப் பார்த்துக் குணமென்னும் குன்றேறி நிற்கும் ஸ்ரீ சுவாமிகள் வெகுளி தோன்ற

'வன்திண் மறலி புடைத்துக் கொடிறு உடைக்கும்
அன்றும் உருகீர்கொல் லாம்?'

என்று வினவுகிருர்கள். இத்தகு பாவிகளை இயமன் எளிதாக எடுத்துச் செல்ல மாட்டான். செய்த பாவங்களுக்காகத் தொடர்ந்து வதைப்பான். கன்னத்தின் உள்ளெலும்பு உடையும் படியாக ஆயுதத்தால் அடிப்பான். அந்த நாளில் கூட ஸ்ரீமந் நடராஜப் பெருமானின் ஆட்டத்தினை எண்ணுமல் உருகாமல் இருப்பீர்களா? 'என்று கோபமாகக் கேட்கிருர்கள்.

அதன் கருத்து உருகும் நல்வாய்ப்பு வரும்போது உதாசீனப்படுத்துவது தவறு என்பதாகும். இக்கருத்தமைந்த பாடலின் முழுவடிவம் வருமாறு:-

"வண்டும் சுரும்பும் ஞிமிறும் குடைந்தார்ப்பத்
தண்டே னிறைக்கும் இதழி நறுங்கண்ணி
எண்டோள்முக் கண்ணன் இமயம் புனைமன்றில்
அண்டர்கள் கண்களிப்பத் தொண்டர் அகம்குளிர்ப்ப
நின்ருடும் ஆடற்கு உருகா திருத்திரால்
வன்றிண் மறலி புடைத்துக் கொடிறுடைக்கும்
அன்றும் உருகீர்கொல் லாம்"

இப்பாடலின் கீழ், பின்வரும் செய்யுள் இலக்கணக் குறிப்பு உள்ளது.

"இது பலவிகற்பத்து ஏழடிப் பஃறொடை வெண்பா. இதன் இரண்டாமடி இறுதிச் சீரிரண்டும் இறுதியெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் இணை இயைபு. மூன்றாமடி முதற்சீரும், இரண்டாம் சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் இணை எதுகை நான்காமடி இறுதிச் சீரெழித்து ஏனை முச்சீரும் இரண்டாமெழுத்து ஒன்றத் தொடுத்தமையால் கூழை எதுகை. அதுவே இரண்டாம் சீரும் இறுதிச்சீரும் இறுதி எழுத்து ஒன்றத்தொடுத் தமை !ால் பொழிப்பியையு. ஐந்தாமடி முதற்சீரும் இறுதிச் சீரும் முரணத்தொடுத்தமையால் ஒரூஉ முரண்

1. இரண்டாமடியில் இதழி கண்ணி என இகர ஈற்றில் இருசீர்கள் இருக்கின்றன. அவை இணைஇயைபு. இயை பென்றது ஈண்டு எழுத்தியைபு.

2. மூன்றாமடியில் எண்தோள் (1) கண்ணன் (2) என எதுகை முதலிரு சீர்களிலுள்ளன எனவே இணை எதுகை எனப்பெற்றது.

3. நான்காமடியில் அண்டர்கள் (1) கண்களிப்ப (2) தொண்டர் (3) என முதல் மூன்றுசீர்களிலும் எதுகை உள்ளன. எனவே இறுதிச்சீரில் எதுகை இன்மையினால் கூழை எதுகையாகிறது.

4. அதே நான்காமடியில் களிப்ப (2) குளிர்ப்ப (4) என இறுதியெழுத்து ஒன்றியுள்ள மையால் மொழிப்பு இயைபு.

5. ஐந்தாமடியில் நின்று இருத்திர் என முதற்சீரிலும் நான்காம்சீரிலும் பொருள் முரண்பட்டு வருகிறது. எனவே ஒரூஉ முரண்தொடை ஆகிறது.

இத்துடன் பஃறொடை வெண்பாக்கட்கு ஸ்ரீ சுவாமிகள் ஆறு உதாரணச் செய்யுட்கள் செய்தளித்தருளினார்கள்.

-சிவ சிவ

# விடையரங்கம்

**வினா: 29** திருச்சதகத்தில் "வாஞகி மண்ஞகி" எனத் தொடங்கும் பாடலில் "யான் எனதென்றவ ரவரைக் கூத்தாட்டு வாஞகி" என்ற தொட ருக்குப் பொருள் என்ன?

— திரு. S. அருணசலம், திருப்பனந்தாள்.

**விடை:** பிறக்கும் போது யாரும் கொண்டு வருவதில்லை, இறக்கும் போது கொண்டு போவதும் இல்லை. இடைப்பட்ட காலத்தில், இறைவன் படைத்த பொருள்களைத் தேடிச்சேகரித்து உலகிலே நுகர்கிருர்கள். அதனல் உலகியற் பொருள் எதுவும் எவருக்கும் சொந்தமில்லை.

எனவே, "உயிர்கள் யாவும் சுதந்தரம் உடையனவல்ல; இறைவனின் அடிமைகள். இறைவனே சுதந்தரம் உடையவன்; அவனுக்கே எல்லாம் உரியன. அதுபோல எல்லாச் செயல்களும் இறைச் செயலே யன்றி உயிர்ச்செயல்கள் அல்ல" என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

இங்ஙன மிருக்க, மக்களாகப் பிறந்தவர்கள், முன்ஞேர் தேடி வைத்த செல்வத்தையும் தாம் தேடிய பொருள்களையும் தமக்கே உரியவை என்று உரிமை கொண்டாடுகின்றனர். அப்பொருள்களைச் சுட்டி "இது என்னுடையது, இது என்னுடையது" (எனது, எனது) என்று நினைக்கின்றனர் தம்மால் நிகழும் செயல்களை எல்லாம் தம் செயலாக எண்ணி "யான் செய்தேன், யான் செய்தேன்" என்று பேசுகின்றனர்.

இங்ஙனம் உண்மை யறியாமல் யான் என்றும் எனது என்றும் பேசி வருகிற அனைவரையும், உலகில் இயங்கும் பதுமைகளாக வைத்து வினை என்ற கயிற்ருல் இறைவஞகிய பொம்மலாட்டக் காரன் பதுமைக் கூத்து ஆட்டி வருகிருன்.

இந்த நுட்பமான சாத்திரக் கருத்தையே "யான் எனது என்ற அவரவரைக் கூத்தாட்டு வாஞகி" என்ற தொடருக்குள் வைத்து மணிவாசகர் உணர்த்துகிருர்.

பொருள்: யான் எனது என்ற அவரவரை — யான் என்றும் எனது என்றும் சொல்லி வருகிற (அறியாமை படைத்தோர்) அனைவரையும், கூத்தாட்டு வானாகி—(அவர்கள் அறியாதபடி அவர்களின் உள்ளே நின்று) பதுமைக் கூத்து ஆட்டி வருகின்றவனாகி, நின்றாயை— நிற்கின்ற (இறைவனாகிய) உன்னை, என் சொல்லி வாழ்த்துவனே— என்ன சொற்களைச் சொல்லி வாழ்த்துவேன்? (அப்படி வாழ்த்துவதும்கூட நீ உள்ளிருந்து ஆட்டுவிப்பதால் வரும் வாழ்த்துத் தானே.)

விடையளித்தவர். தா. ம. வெள்ளைவாரணம்.

# இதமான வாழ்வுக்கு எளியவழிகள்

### வாந்தி பேதி காலராவுக்கு

ஒருபிடி வேப்ப இலையை எடுத்து அம்மியில் வைத்து நன்றாக மைபோல் அரைத்து 3 அவுன்ஸ் தண்ணீருடன் கலந்து கொடுக்கக் குணமாகும்.

### கொசுக்களைப் போக்குவதற்கு

முற்றின வேப்ப இலையை நெருப்புச் சட்டியில் போட்டுப் புகையிடக் கொசுக்கள் அழிந்து விடும்.

### நாட்பட்டமூல வியாதிகட்கு

வேப்பம் பருப்பைச் சுத்தப்படுத்தி எடுத்து வைத்துக் கொண்டு மைபோல் அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு காலை மாலை 2 வேளையாக 7 நாட்கள் சாப்பிட மூலம் குணமாகும்.

### காதில் சீழ்வடிதலுக்கு

வேப்ப எண்ணெய் 3 ரூபாய் எடை எடுத்து. அதில் வசம்பு, பூண்டு, மஞ்சள் ஒவ்வொன்றும் கால் ரூபாய் எடை எடுத்துத் தட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு காதில் சிலதுளிகள் விட்டுப்பஞ்சை வைத்து வரச்சீழ் வடிவது குணமாகும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

( மாதப் பத்திரிகை )

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தா தாரராகச் சேருங்கள்.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருடச் சந்தா | ரு. 22 |
| ஆயுள் சந்தா | ரு. 250 |
| தனிப் பிரதி | ரு. 2 |

| | | |
|---|---|---|
| ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் | | தொலைபேசி |
| ஸ்ரீராமகிருஷ்ண மடம் | | 71959 |
| மயிலாப்பூர் : | சென்னை 600 004. | 71231 |

# சிவபோகசாரம், சொக்கநாத வெண்பா உணர்த்தும் வாழ்வியல் உண்மைகள்

நா. மாதவி. M. A., B. Ed.

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

தமிழ் கூறும் நல்லுலகத்து இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அமைதியுடனும், இன்பமாகவும் வாழ விரும்புகின்றன. வாழ்க்கைக் கடலில் அலைமோதும் மக்களினத்தை அமைதிப்படுத்தி நன்னெறியில் செலுத்தி முத்திப் பேற்றுக்கு அழைத்துச் செல்வதே சமயமாகும் சமயங்கள் யாவற்றினும் முதன்மையும், தொன்மையும் பெற்றுப் பலராலும் பாராட்டப் பெறுவது சைவசமயமாகும். இச் சைவ சமயத்தைப் பரப்பிய சிவஞானச் செல்வராகச் சமயசாரியார் நால்வரும், சந்தாஞசாரியர் நால்வரும் விளங்குகிறார்கள். சமயாச்சாரியர் நால்வருள் மூவர் முதலிகள் தேவாரத் திருமுறைகளையும் மணிவாசகர் தேனினும் இனிய திருவாசகம், திருக்கோவையார் எனும்அருட்பனுவல்களையும் அருளிச் செய்தார்கள்.

சந்தாஞச்சாரியார் நால்வருள் முதல்வர் மெய்கண்ட தேவ நாயனார். அவர் வழியாக உபதேச முறையில் ஏனைய மூவரும் ஒருவர் பின் ஒருவராய் ஆசாரியர்களாய்த் தமிழகத்து அருள் ஞான ஒளியைப் பரப்பினர். இவர்கள் திருக்கயிலையில் சீகண்ட பரம சிவன் நந்தி பெருமானுக்குச் செய்த உபதேசத்தை அகச்சந்தான புறச்சந்தானங்களால் வரப்பெற்று அதனைத் தெளிந்து சிவானுபவச் செல்வர்களாய் விளங்கினர். அவர்கள் தாம் பெற்ற சிவாஞன இன்பத்தை உபதேச வாயிலாகவும், அருள் நூல்கள் வாயிலாகவும் உலகிற்கு வழங்கினார்கள்.

இம்மெய்கண்ட சந்தானத்தில் கமலை ஞானப்பிரகாசர்பால் ஞானோபதேசம் பெற்றுச் சிவானுபவம் முதிரப் பெற்று அக்குரு

மூர்த்தியால் அருள் ஞானத்தை வழங்கும் பேறு பெற்றவர் "ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்". இவர்கள் தமது சிவானுபூதி நிலையிலே அருளிச் செய்த சிவபோக சாரமும் தமது ஆன்மார்ந்த மூர்த்தியின் மேல் பாடிய சொக்கநாத வெண்பாவும் விளக்கும் வாழ்வியல் உண்மைகள் இங்கு ஆராயப்படுகின்றன.

**நூல் வரலாறு:** 1. சிவபோக சாரம்
2. சொக்கநாத வெண்பா

**சிவபோக சாரம்:-**

அளவிலா ஆனந்தமாகிய வீட்டின்பத்தின் அனுபவ நிலையைப் பெறும் பேறு அனுபூதியாம். நம் ஆதி பரமாசாரியராகிய குருஞான சம்பந்தருக்கு இவ்வனுபூதி நிலை திருவாரூரிலே தம் குருமூர்த்தியான ஞானப் பிரகாச தேசிகர் வாயிலாகக் கிடைத்தது. அத்தகைய நிலையில் அருளிச் செய்தது இச்சிவபோக சாரமாகும். இஃது 139 வெண்பாக்களையும் 5 தனிப்பாடல்களையும் (யாப்பு முறை வேறுபட்டது) பெற்று விளங்குகிறது.

**சொல்லாட்சி:-**

"போகம்" என்ற சொல்லைச் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் "வறுமை" என்பதற்கு உரை எழுதுங்கால் "போகம் துய்க்கப் பெருத பற்றுள்ளம்" எனக் குறிப்பிடுகிருர். இதனை உடற் போகம், உலக போகம் என்று சொல்லலாம். இவற்றுக்கும் மேலாகச் சிவனல் உயிர் அடையும் போகத்தைச் சிவபோகம் என்று கூறலாம்.

சிவன் + போகம் + சாரம் = சிவபோகசாரம்

பூமியில் ஒருவரும் பார்த்தறியாத அருளாகிய வித்தனை இறைவன் நேரே தோன்றியோ அல்லது ஆசிரியர் மூலமாகவோ கொடுக்கப் பெற்றுப் பண்பட்ட உள்ளத்தில் விதைக்கிருர். அது முளைத்தற்கு அன்பாகிய நீரைப் பாய்ச்சினல் சிவமாகிய முளை அதனின்றும் தோன்றிப் பேரின்பமாகிய சிவபோகமென்னும் விளைவைக் கொடுக்கிறது. இவ்வித சிவபோக விளைவைப் பெற்று மகிழ்பவர்களே இறையடியார்கள். இதனைத் தாயுமானர்,

"நேராக நின்று வினைப் போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டம் எய்த

வினையின் படிக்கு நீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமன்றோ''

என்று குறிப்பிடுகிறார். இவ்வருட் கருத்தினை அப்பர் பெருமானும்

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே''

என உழவுத்தொழிலுடன் ஒப்பிட்டுப் பேசுகிறார். இங்குக் குறிப்பிடப் படும் சிவகதியும் சிவபோகமும் ஒன்றேயாம். சிவபோக நெறியினை மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றான உண்மை நெறி விளக்கம்,

''பாதகங்கள் செய்திடினும் கொலைகளவு கள்ளுப்
பயின்றிடினும் நெறியல்லா நெறி பயிற்றிவரினும்
சாதி நெறி தப்பிடினும் தவறுகள் வந்திடினும்
தனக்கென ஓர் செயலற்றுத்தான் அதுவாய் நிற்கில்
நாமன் இவன் உடல் உயிராய் உண்டுறங்கி நடந்து
நானா போகங்களையுந் தானாகச் செய்து
பேத மற நின்றவனைத் தானாக்கி விடுவன்
பெருகு சிவபோகமெனப் பேசு நெறி இதுவே.

என்ற பாடலில் இறைவன் தன் செயலற்று நிற்கும் அடியாரைத் தானாக்கிச் சிவபோகத்துய்ப்பான். அவர்கள் செய்யும் கொலை, களவு, கள், சாதிநெறி தவறுதல் குற்றங்கள் எல்லாம் தவறாகக் கருதப்படமாட்டா. இவ்விதம் செய்த தவறுகளும், தவறு செய்த அடியார்களும் [எறிபத்த நாயனார், கோட்புலியார், திருநீலக் கண்டர், திருநாளைப் போவார், வன்தொண்டர்] பெரிய புராணத் தில் இடம் பெற்று உள்ளனர். இக்கருத்தினைச் சித்தியாரும் ஏற்கிறது.

ஞாலமதின் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவ தொன்றில்லை
சீலமிலை தவமில்லை விரதமொடாச் சிரமச்
செயலில்லை தியானமிலை சித்தமலமில்லை''

என்ற பாடலும் இவ்வுலகத்துச் சிவஞானம் கைவரப் பெற்ருேர் தன்னிலை மாறிச் சிவனிலை பெறுகின்றனர். எனவே அவர்கள் அனுபவம் உலக அனுபவத்தினின்றும் மாறுபட்ட சிவானுபவமாம். இதனை,

மன்னு சிவன் றனையடைந்து நின்றவன்றனுலே
 மருவு பசுகரணங்கள் சிவ கரணமாகத்
துன்னிய சாக்கர மதனிற் றுரியா தீதந்
 தோன்ற முயல்சிவா நுபவஞ் சுவா நுபூதிகமாம்

என்ற சித்தியார் பாடல் தெளிவாக்குகிறது.

சாரம் என்பது பிழிவு. ஆசிரியர் குருவாயிலாகச் சிவானுபூதியில் பெற்ற சுவானுபவத்தைச் சுருக்கமாக எளிய நடையில் அரிய உவமையால் விளக்கியுள்ளார். அடிகள் வணக்கம் முதலாக பொது நிலை ஈருகப் பதினெரு தலைப்புக்களின் கீழ் இதனை விளக்கியுள்ளார். இவ்விதம் சிவபோகத்தைக் கூறினுலும் ஆங்காங்கே வாழ்வியல் உண்மைகளையும், சித்தாந்தக் கருத்துக்களையும் வாழ்க்கைத் தத்துவங்களையும், கடைப்பிடிக்கும் நெறிகளையும் துறவறத்தையும், புராணக் குறிப்புக்களையும் குறிப்பிட்டுள்ளார் மேலும் ஆசிரியர் சிவபோகம் என்ற சொல்லைப்

"புசிப்போஞ் சிவபோகம்"

"... ... ... உணர்வு ஒழிந்தக்கா
லன்ருே சிவபோகமாம்'

"... ... ... சிவ
போகம் விளையப் புணர் நெஞ்சே"

 "தன் போத
மில்லார் சிவபோக மென்றும் அருந்தியிடு"

என நான்கிடங்களில் குறிப்பிடுரர். மேலும் பாடல் தொடக்கம் "சித்தி" எனத் தொடங்கி இறுதிப் பாடல் முத்தி வரும்" என முடிவு பெற்றுள்ளது. இவற்வறை இணைத்தால் இன்பப் பேருகிய சிவபோகம் முத்திதரும் என்று அறிய முடிகிறது.

(வளரும்)

# திருச்சதகமும்
# கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியும்

B. பாஸ்கரன் M. A, M. Phil

## சொல்லாட்சி ஒப்பீடு

தொடர்ச்சி

14 பாவநாச நின்சீர்கள் பாடவே
"பழைய தீவினைப் பகைதொலைத்திடும்
பாவநாசனே ... ... ... ... ..."

15 "மூவர்கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
"என்கண் ணிடத்தின் அகலாத செல்வன்
எழிலார் களவின் முதல்வன்"

மேற்கண்ட சான்றுகளில் அப்பன், இறைவன், ஈசன் உடையான். உத்தமன், எந்தை, எம்பிரான், எம்பெருமான், எம்மரன், ஒருவன், கடவுள், தேவதேவன், நாதன், பாவநாசன் முதல்வன் என்ற சொல்லாட்சிகள் இரு நூல்களிலும் பொதுவாக இறைவனைச் சுட்டுவனவே. ஆயினும் இவ்விருவரும் தமது நூல்களில் சிவனைக் குறிக்கவே இச்சொற்களைக் கையாண்டுள்ளார். மற்றும் "அங்கணன் அச்சன், அத்தன், அறிவன் சங்கரன், சிவலோகன் சிவன், தம்பிரான், திருச்சிற்றம்பலவன், தில்லை நிருத்தன், பிச்சைத் தேவன், புயங்கன், மதிக்கண்ணியன், விரிசடையான் என்ற சொற்கள் சிவனைக் குறிப்பனவாகத் திருச்சதகத்தில் மட்டும் மணிவாசகரால் கையாளப்பட்டுள்ளன.

அண்டர்நாதன், அண்டர்பிரான், ஆடும் ஐயன், ஆதிபன் ஆளுநடை நாயகன், கன்னிபாகன், காலகாலன், குழகன், கோமான், ஞானநாயகன், நஞ்சமுண்டான், பரமேட்டி, புண்ணியன் புனிதன், மழவிடையான், மால்விடையான், மான்மழுக்கையன்

மூகலிங்கன் என்ற சொற்கள் சிவனைக் குறிப்பனவாகத் திருக் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியில் மட்டும் அதிவீரராமரால் கையாளப்பட்டுள்ளன.

**சமயச் சார்பான சொல்லாட்சி:**

அடியார், அருள், உம்பர், உயிர், ஐம்புலன், கதி, கருணை, கல்வகைமனம், கல்தகைமனம், கூற்றம், கூற்றுவன், கோயில், சரண், சிந்தனை, ஞானம், தவம், திரு, திருவடி, நரகம், நரகு நாயினுக்கு, நாயினேன், பதம், பற்று, பிறவி, பூதலார், பெறும் பேறு, பேய், பொற்பாதம், பொன்னடி, பொன்னகர், பொன்னுடு போற்றி, மலம், மலர்க்கழல், மலரடி, மறை, மறையீறு, மறைமுடி, மனம், மால்விடை, முனிவா, யான் எனது, வந்தனை, வானநாடார், வானவர், விண்ணோர், விண்ணவர்.

மேற்கண்ட சமயச் சார்பானச் சொல்லாட்சி திருச்சதகத்துக் கும், திருக்கருவைப்பதிற்றுப் பத்தந்தாதிக்கும் இடையேயுள்ள நெருக்கத்தைப் புலப்படுத்துகிறது. இச்சொற்கள் ஏனைய சமய நூல்களிலும் காணப்படினும் ஏனைய சமய நூல்களோடு உறவு பெறுவதைப் போலவே இவ்விரு நூல்கள் தம்மோடும் உறவுடையன என்பதை அறியலாம்.

**ஏனைய சொல்லாட்சி :**

அவம், அறிவு, ஆசை, ஆதி, உடம்பு, உடல், உண்மை, உழுவை, எட்டு, எவ்வம், எள்ளும் எண்ணையும், ஒளி, கடல், கண்கள், கண்இணை, கன்னல், காலம், கீழ், கை, கொன்றை, கோலம், சுடர், செய்வது, செல்வம், செழு தமியேன், திண், தில்லை துணை, நஞ்சு, நா, நெஞ்சு, மாயம், மான், முழுவதும் வண்டு, வண்ணம், விடை.

மேற்கண்ட் சொல்லாட்சி திருச்சதகத்திலும், திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியிலும் காணப்படுகின்றன மேற்கண்ட சொல் லாட்சிகளை ஒத்து நோக்கும் போது திருச்சதகமானது திருக் கருவைப் பதிற்றுப் பத்தந்தாதிக்கு வழிகாட்டியாக அமைந்திருக் கிறது எனலாம்.

# ஆலயபூஜைப் படிக்காசு நிதி

## நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

| திரு/திருமதி | முன் இருப்பு | 26766—15 |
|---|---|---|
| கும்பகோணம் துர்க்காகுடில் அப்பு | | 5—00 |
| உக்கரை கைலாசம் | | 5—00 |
| மணிக்குடி R மாணிக்கம் | | 40—00 |
| மயிலாடுதுறை S. தங்கப்பசெட்டியார் | | 10—00 |
| திருச்சி C. மூக்கப்பிள்ளை | | 101—00 |
| | ஆக ரு | 26927—15 |

| | |
|---|---|
| சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் கோயில் ஆலயச் செலவு | 68—50 |
| திருந்து தேவன்குடி ஸ்ரீ கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு | 90—00 |
| தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு | 90—00 |
| பாணுதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு | 75—00 |
| ஆக ரூ | 323—50 |


Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
LNo. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

**ஸ்ரீ நடராஜ விலாஸ்**

**ஜுவல்லரி ஹால்**

**சிதம்பரம்**

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, **சிதம்பரம்**

தென்னார்க்காடு மாவட்டம் – 608 001

# செய்யமுடியாததைச் சொல்லாதே

நெல்லை சிவமணி. புலவர் ம. சிவசம்பு எம். ஏ.,
பாளையங்கோட்டை

நண்பர் ஒருவர் தன்னிடம் யார் வந்து உதவி கேட்டாலும் முடியாது என்று சொல்லவே மாட்டார். ஓர் அரிய காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றலும் அவருக்குக் கிடையாது. இதை அறிந்த நண்பர் ஒருவர் உம்மால் முடியாத காரியத்தை முடியாது என்று கூறவேண்டியது தானே. ஏன் தவறான வாக்குறுதி கொடுக்கிறீர் என்று கேட்டார்? அதற்கு அவர் தம்மால் அக்காரியம் முடியாது என்று கூறின் தம் நண்பர் மனத்துன்பம் அடைவாரே. என்செய்வது? அதற்காகத்தான் இப்படிச் சொல்கிறேன் என்றார். காரியம் கருதி வந்த நண்பர் காரியம் முடியாது வருந்தினர். தம்மால் அக்காரியத்தை முடிக்க இயலாது என்று கூறி இருந்தால் அந்த நண்பர் வேறு யாரைக் கொண்டேனும் செய்து முடித்திருப்பார். தானும் செய்யாமல் மற்றவர் உதவியையும் நாடவிடாமல் செய்யத செயலை. ஸ்ரீ குமரகுருபரர் கண்டிக்கிறார். இது நாகரீகம் அல்ல. அநாகரீகம் என்கிறார்.

தாம் தம் நண்பரிடம் மறுத்துரைத்தால் அவர் மனம் நோவுமே என்று எண்ணி அவர் தலையை வெட்டி வீழ்த்தி விடுவது போன்றிருக்கிறது என்று கூறுகிறார்.

இப்படிப்பட்ட பழக்கம் இன்றும் நம்மிடம் இருக்கிறது. அந்த ஆள், ' சரி! சரி!'' என்று சொல்லிக் கடைசியில் கழுத்தை அறுத்து விட்டான் ஐயா!'' என்று கூறி வருந்துவதைக் கேட்கிறோம்.

ஸ்ரீ குமரகுருபரர் தம்மால் முடியும் செயலை முடியும் என்றும் முடியாத செயலை முடியாது என்றும் கூறுவதே தகுந்தது என்று கூறுகிறார்.

செய்க்கடவ அல்லனவும் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிகம் என்னும் - செயிர்த்து உரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் தண்ணளி போல்
எஞ்சா(து) எடுத்துரைக்கற் பாற்று.

நீதிநெறிவிளக்கம் 71.

# வெண்காட்டு முக்குளம்

குஞ்சரன்

**திருவெண்காடு;**

கடலின் அலைமோதும் கரையில் காட்சிக்கு இனிய துறைமுகமாக அன்று காவிரிப்பூம்பட்டினம் விளங்கியது. அதன் ஒரு பகுதியாய்ச் சிறந்திருந்தது திருவெண்காடு. இன்று அது தனி ஊராய்ச் சிறப்புக்குன்றியுள்ளது. காரணம், மன்னன் ஆட்சி மடிந்ததும் மக்கள் வாணிபத்தைக் கைவிட்டு வெளியேறியதுமே ஆம். மேலும் போக்கு வரவிற்குப்போதுமான வசதியின்மையும் காரணமாகும். ஆனால் இப்போது அங்குப் போக்குவரத்துச் சிறிது உண்டாகி இருக்கிறது.

ஊரில் சிறப்பில்லை என்றாலும், தலச்சிறப்பு மிகமிக உயர்ந்தது. கண்கவரும் கோவிலின் அமைப்பும் உளம் கவரும் இறைவன் சந்நிதானமும் அகோர மூர்த்தியின் அழகிய திருமேனியும ஒருமுறை கண்டு விட்டால் பிறகு மறக்கவே முடியாது.

இங்கே வெள்ளையானை பூசித்துப் பேறு பெற்றிருக்கிறது. மூவராலும் பாடப்பெற்ற பதிகங்கள் உள்ளன. சிறுத்தொண்டரின் மனைவியான திருவெண்காட்டு நங்கை இவ்வூரிலேதான் பிறந்தவர். பட்டினத்தார் வழிபட்டிருக்கிறார். மெய்கண்டார் அவதாரம் செய்யக் காரணமாக இருந்ததும் இத்தலமே.

இத்தலத்தில் அகோர மூர்த்தியின் சன்னதி மிகப்பிரசித்தமானது. தருமபுர ஆதீனத்தின் அடியார் கூட்டத்துள் ஒருவரும் மாபாடிய கருத்தரும் 17-ஆம் நூற்றாண்டினருமாகிய ஸ்ரீமத் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் திருப்பணி செய்யப்பட்ட நடராசப் பெருமான் திருச்சபை சிறப்பு வாய்ந்தது. மேலும் இத்தலத்துக்குச் சிறப்பை மேன் மேலும் பெருக்குபவை முக்குளங்களேயாகும்.

**முக்குளம்;**

கோயிலின் கீழ்புற வாயிலில் நுழைந்து சிறிதுதூரம் சென்றதும் தென்புறத்தில் அழகான படித்துறைகளுடன் கூடிய ஒரு குளத்தைக் காணலாம். இது அக்கினி தீர்த்தம் எனப்படும். இதன் கீழ்கரையில் அக்கினீஸ்வரர் எழுந்தருளியுள்ளார். இக்

குளத்திற்கு மேற்கே தெற்குப் பிரகாரத்தில் மற்ருெரு குளம் இருக்கிறது. இது சூரிய தீர்த்தம் எனப்படும். இதன் கீழ்கரையில் சூரியேஸ்வரர் எழுந்தருளியுள்ளார். அங்கிருந்து வலமாக வடக்குப் பிரகாரத்துக்கு வந்தால் கண்ணைக் கவரும்படியான பெரியகுளம் ஒன்றைக் காணலாம். இது சந்திர தீர்த்தம் எனப்படும். இது அம்மன் சன்னதிக்கு நேர் கிழக்காக உள்ளது. இதன் கீழ்கரையில் மிகப்பெரிய ஆலமரம் இருக்கிறது இம்மரத்தடியில் சந்திரேஸ்வரர் எழுந்தருளி இருக்கிருர்.

இந்த மூன்று குளங்களும் மிகவும் பழைமை வாய்ந்தவை. 7-ம்நூற்ருண்டினரான திருஞானசம்பந்தர் தமது பதிகத்தில் முக்குளங்களைக் குறிப்பிட்டிருக்கிருர். 2ம் நூற்ருண்டில் எழுந்த சிலப்பதிகாரத்தில் இக்குளங்களைப் பற்றிய பேச்சு வருகிறது. அது வருமாறு;

கண்ணகி கோவலனைப் பிரிந்து தனித்திருந்து வருந்திக் கொண்டிருந்தாள். கண்ணகியின் தோழியான தேவந்தி பாசண்டச் சாத்தன் கோவிலுக்குப்போய்த் திரும்பி வந்து கண்ணகி மீது அறுகையும் நெல்லையும் தூவி "பெறுக கணவனெடு" என்று வாழ்த்தினள். மேலும்,

கடலொடு காவிரி சென்றலைக்கும் முன்றில்
மடலவிழ் நெய்தலம் கானல் தடமுள;
சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் கைதொழுவார் கணவரொடு
தாமின் புறுவர் உலகத்துத் தையலார்"

என்றும் கூறினள். (சிலம்பு—கனத்திறம் உரைத்த காதை)

சிலம்பில் சோமகுண்டம் சூரியகுண்டம் என்று குறிக்கப்பட்டவை சந்திர தீர்த்தத்தையும் சூரிய தீர்த்தத்தையுமே ஆகும். சிலம்பில் அக்கினிதீர்த்தம் குறிக்கப்படாவிட்டாலும் அதையும் உபலக்கணத்தால் சேர்த்துக் கொள்ளலாம் இங்ஙனம் இம்முக்குளங்கள் சங்க காலத்திலேயே குறிக்கப்பட்ட பழைமையை அறியலாம்.

**சம்பந்தர் வாக்கு;**

திருவெண்காட்டிற்குச் சம்பந்தரால் பாடப்பெற்ற பதிகங்கள் மூன்று உள்ளன. அவற்றில் முதற்பதிகத்தின் இரண்டாம் பாடல் வருமாறு;

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினேடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவார் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோய் வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே.

(பொழிப்புரை) மூங்கிலைப் போன்ற தோள்களையுடைய உமை யொரு பாகனது திருவெண்காட்டில் உள்ள முக்குள நீரில் மூழ்கும் செயலுடையவர்களைத் தீவினைகள் வந்து பொருந்தமாட்டா; பேய் களும் வந்து அணுக மாட்டா; முன்பு பேய்பிடித்திருந்தாலும் அதுவும் அகன்று போகும் மேலும் முக்குளத்தில் நீராடுபவர்கள் மகப்பேற்றுடன் தம் உள்ளத்தில் நினைத்த விருப்பங்களாயின வரங்களையும் பெறுவார்கள்; இவற்றில் ஒரு சிறிதும் ஐயப்பாடு வேண்டா,

**மெய்கண்டார் அவதாரம்;**

13-ம் நூற்றாண்டில் பெண்ணாகடத்தில் அச்சுதகளப்பாளர் என்ற வேளாளர் ஒருவர் வாழ்ந்தார். அவர் மகப்பேறின்றி வருந்தினர்; தனது குலகுருவாகிய அருணந்தி சிவாச்சாரியாரிடம் விண்ணப்பித்துக்கொண்டார். சிவாச்சாரியாரும் சிவபூசை செய்து அதன் முடிவிலே திருமுறைகளையும் பூசித்துக் கயிறு சாத்திப் பார்த்தார். அப்போது சம்பந்தர் வாக்காகிய "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினேடு உள்ள நுனைவு ஆயினவே வரம் பெறுவர்'' என்னும் பாடல் கிடைத்தது. சிவாச்சாரியார் அப்பாடலை விளக்கிக் கூறி அச்சுத களப்பாளரை மனைவியோடு திருவெண்காட்டிற்குச் சென்று முக்குள நீராடி விரதமிருக்கச் சொன்னர். களப்பாளரும் ஆச்சாரியரின் ஆணைப்படி திருவெண்காட்டிற்குச் சென்று முக்குள நீராடி விரதம் இருந்தார். களப்பாளரின் மனைவியார் கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றார். குழந்தைக்குச் சுவேதவனப் பெருமாள் என்று பெயரிட்டார்கள். அக்குழந்தை மூன்றாண்டுகள் நிரம்பிய காலத்தில் தெருவில் தேருருட்டி விளையாடும் போது பரஞ்சோதி என்னும் சிவஞானியர் அக்குழந்தைக்கு ஞானோபதேசம் செய்து மெய்கண்டார் என்னும் தீட்சாநாமமும் கொடுத்தார். இந்த மெய்கண்டார் தமது மெய்ஞ் ஞானத்தால் தமது குருவான அருணந்தி சிவாச்சாரியாரை முதன் மாணாக்கராக்கிக் கொண்டவர். சிவஞானபோதம் என்னும் சாத்திர நூலையும் ஆக்கித்தந்தவர்.

**முடிவுரை;**

திருவெண்காடும் முக்குளமும் இன்னோரன்ன சிறப்புடைமையால், காவிரிப்பூம் பட்டினத்துக்கு நீராட வருகிறவர்கள் இத்தலத்திற்கும் வந்து முக்குளத்தில் நீராடி வருவதையும், பிள்ளைப்பேறு வேண்டி முக்குளத்தில் நீராடி வருவதையும் இன்றும் கண்கூடாகக் காணலாம்.

உ
சிவ சிவ

# தில்லையில் ஆடிச் சுவாதியில்
# இன்னிசைத் திருமுறை விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**
அருளாணையின் வண்ணம் நடத்தப் பெறுவது
பிரபவ ஆண்டு ஆடித்திங்கள் 17 - ஆம் நாள் (2 - 8 - 87)
ஞாயிற்றுக் கிழமை ஆடிச்சுவாதி

## சிதம்பரத்தில் திருமுறை விழா

திருமுறைவாணர்கள் :

1. **சுரலய இசை வள்ளல்** திரு. எம். கனகசபைப்பிள்ளை
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், சிதம்பரம்.
2. **கலைமாமணி, தேவார இசைமணி** திரு. முத்துக்கந்தசாமிதேசிகர்
ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி.
3. **இன்னிசை மாமணி** திரு. எஸ். திருஞானசம்பந்தம்
தருமையாதீனக் கட்டளை ஓதுவார், சீர்காழி.
4. **சங்கீதபூஷணம்** திரு. ச. தண்டபாணி தேசிகர்
சைவசமய பிரசார நிலையம், சென்னை.
5. திரு. ப. ராமச்சந்திரன், விருந்தாசலம்.
6. **இன்னிசை மணி** திரு. இ.எம். வேதாசலம் சென்னை.
7. சென்னை. திரு. ஆர். சிவப்பிரகாசம் பிள்ளை **பிடில்,**
8. சிதம்பரம் திரு எஸ். ஏ கோபாலன் **வேய்ங்குழல்,**
9. தில்லையாடி திரு. எம். ஆர். மாரியப்பன், மிருதங்கம்

அருளாணையின் வண்ணம்
**ஆர். சுப்பிரமணியபிள்ளை**
ஏஜண்டு ஸ்ரீ காசிமடம் சிதம்பரம்.

---

குறிப்பு : சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியில் இரவு 8 மணிக்குத் தொடங்கித் திருமுறை வாணர்கள் சிவமே நிலவிய திரு வீதிகளில் இரவு முழுவதும் திருமுறை ஓதிக் காலை 6 மணிக்கு ஸ்ரீ நடராஜப் பெருமான் சந்நிதியில் நிறைவு செய்வார்கள்

# திருநாவுக்கரசரும், காந்தியடிகளும்

இரா. தமிழ்ச்செல்வம் எம். ஏ., எம். பில்., )
காட்டுமன்னர் கோயில்

முகவுரை :

காந்தியடிகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, செயற்கரிய பல செயல்கள் செய்து இஞ்ஞான்றும் உலகமக்கள் அனைவராலும் உவந்தினிது ஒருங்கே போற்றப்படுகிறார். இவருடைய அருமை பெருமைகளை ஆய்ந்து உணருங்கால் இவர்க்கும் நாவுக்கரச பெருந்தகைக்கும் பலதிறப்பட்ட பண்பொப்புமைகள் அமையப் பெற்றிருப்பது இக்கட்டுரையில் சிந்திக்கப் பெறும்.

அமைதிப் புரட்சி :

ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் அடிமை நிலையுற்றுக் கிடந்த நம்பாரதப் பெருநாடு சாந்தியடிகளால் விடுதலை ஒளிபெற்றது. அதுபோல் நாவுக்கரசரின் பெருந்தகையால் பல்லவப் பேரரசு தமிழ்ப் பண்பாடு நெறி நழுவித் தழைப்பதாயிற்று. " கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தம் ஒன்று " நடத்திக் காந்தியடிகள் ஒரு மாபெரும் புரட்சியை நிகழ்த்தியவாறு போல நாவுக்கரசரும் மகேந்திரவர்மன் எனும் பல்லவப் பேரரசனை மனம் மாறச்செய்து அவனை ஆட்கொண்டு காத்தருளினர்.

அப்பரடிகள் நிகழ்த்தியருளிய அமைதிப் புரட்சியின் அரிய வினைவினைத் திருத்தொண்டர்புராணம் மூலம் நாம் நன்கறியலாம். சுருங்கக் கூறின் நாவுக்கரசரும், காந்தியடிகளும் " அரசியலை அருளியல் வழிப்படுத்தி நடத்திய அறவோர் " எனக் குறிப்பிடல் பொருந்தும்.

நாட்டின் தந்தை :

இன்றளவும் நாம் அனைவரும் காந்தியடிகளை நாட்டின் " தேசத் தந்தை " என்று பாராட்டி வருகின்றோம். அத்தகைய அரும்பெரும்

பொருட் குறிப்பிலேயே திருஞானசம்பந்தர் நாவுக்கரசரை பல இடங்களில் "அப்பர்" எனச் சிறப்பித்துரைக்கிறார்.

**என்கடன் பணிசெய்து கிடப்பதே:**

அகிம்சையும், மன்னுயிர்த் தொண்டுமே காந்தியடிகளின் வாழ்க்கையும் குறிக்கோளுமாக இருந்தன. நாவுக்கரசரும் "தொண்டலால் நுணையும் இல்லை" என்னும் துணிவினராய் "என்கடன் பணி செய்து கிடப்பதே" எனும் உயரிய குறிக்கோள் உடையவராய்த் திகழ்ந்தார். இன்னா செய்யாமை என்னும் "அகிம்சை நெறி" காந்தியடிகளின் பேச்சும் மூச்சுமாக் இருந்தது. திருநாவுக்கரசர் "தயா மூலதன்மம்" என்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலஞ்செய்யும் தன்நலம் கருதா நெறியினராய் வாழ்க்கை நடத்தினார்.

**உழவாரமும், இராட்டையும்:**

திருநாவுக்கரசரின் அடையாளச் சின்னம் "உழவாரம்" ஆதல் போல, "இராட்டை" காந்தியடிகளின் அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது. நாவுக்கரசர் நாளும் தமது திருக்கையில் உழவாரம் ஏந்தித் திருக்கோயில்களிலும், வீதிகளிலும் கல்லும் முள்ளும் பெயர்த்தெறிந்து உழவாரத் திருப்பணி புரிந்தார் ஆதலால் "உடைய அரசு உலகேத்தும் உழவாரப் படையாளி" எனப் புகழப் பெற்றார்.

காந்தியடிகள் முதுமையிலும் அழகுமுதிர்ந்து, அருள் கனிந்து நம்மனோரை மயக்கி மகிழ்விக்கும் ஆற்றல் உடையவராய் எளிய தோற்றத்தினராய் நம் மனக்கண் முன்னே காட்சியளிக்கின்றார், நாவுக்கரசரும் இங்ஙனமே திகழ்ந்ததாகச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

"சிந்தை இடையறா அன்பும்
திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும்
கைஉழவாரப் படையும்"

எனவரும் பெரியபுராணப் பாடல் ஈண்டு நினைவு கூரற்பாலது.

இறைவனிடத்தும், உயிர்களிடத்தும் "இடையறாத அன்பு இவ்விரு பெருமக்களிடத்தும் இருந்து வந்தது. இருவருமே ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் நிலவுலகில் வாழ்ந்தவர் ஆதலின் "திரு

மேனி தன்னில் அசைவும்" இருவர்க்கும் இருந்தது. மிக எளிய ஆடையணிந்து "கந்தை மிகையாம் கருத்து" வாய்ந்தவராய் இருவரும் காட்சியளித்தனர்.

**சத்தியாக்கிரகமும், உண்ணுநோன்பும்:**

காந்தியடிகளுக்குச் சத்தியாக்கிரகமும், உண்ணுநோன்பும் மிகச் சிறந்த போர்க் கருவிகளாக அவ்வப்போது விளங்கி நலஞ் செய்தன. அவ்வாறே "பழையாறை வடதளி" என்னும் இடத்தில் நாவுக்கரசரும் சத்தியாக்கிரகம், உண்ணுநோன்பு என்னும் இரு பெருங்கருவிகளை முதன்முதலாகப் படைத்துக்கொண்டு போராடி அவற்றின் துணையால் தம் கருத்தும் விருப்பமும் நிறைவேறப் பெற்றுச் சிறந்ததொரு வெற்றியினைப் பெற்றார்.

இவ்வுண்மையினை,

"வண்ணங் கண்டு நான் உம்மை
வணங்கி யன்றிப் போகேன் என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே!"

எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறியிருத்தல் ஈண்டு மகிழ்ந் துணரற் பாலது.

**சமரசநோக்கு:**

காந்தியடிகள் தம்மைச் "சநாதன இந்து" எனப் பெருமிதத்துடன் கூறிக்கொண்டு பிற சமயங்களையும் மதித்துப் போற்றித் தழீஇ ஒழுகினர். அங்ஙனமே நாவுக்கரசரும் ஒருசிறந்த சிவநெறிச் சான்றோராக விளங்குகின்றனரேனும், சமயப்பொறுமை கொண்டிருந்தார். சமயங்கள் தம்முன்னே உயர்வு தாழ்வு குறித்துப் போரிடுதலை இவர் விரும்பவில்லை.

**தீண்டாமை ஒழிப்பு:**

தீண்டாமை என்பது இந்துமதத்திலுள்ள ஒரு கறை காந்தியடிகள் சாதி வேற்றுமைகளைக் கடிந்து தீண்டாமையினை ஒழிக்கப் பெரிதும் பாடுபட்டார். இங்ஙனமே திருநாவுக்கரசரும் சாதி

வேற்றுமைகளைக் கடிந்து தீண்டாமையினை ஒழித்தருளும் கருத்துடையராக விளங்கியமை கருதற்பாலது.

**நாமார்க்கும் குடியல்லோம் :**

காந்தியடிகள் "வெள்ளையனே வெளியேறு" எனமுழங்கி ஒரு பெரிய வல்லரசினை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றார். நாவுக்கரசரும் பல்லவப் பேரரசை எதிர்த்து "நாமார்க்கும் குடியல்லோம்" என முழங்கி வெற்றி வாகை சூடினர்.

**மக்கட் தொண்டே மகேசன் தொண்டு :**

காந்தியடிகள் ஒல்லும் வகையெல்லாம் ஓவாது அறவினைகளை செய்துவரும் சிறப்பியல்புடையவராக விளங்கி வந்தார். முதல் உலகப்போர் முதலியன நிகழ்ந்த காலங்களில் தம்உயிரை மதியாது மருத்துவப்படை பொறுப்பினராய் இருந்து, புண்பட்ட வீரர்களுக்கு மருத்துவ உதவிகள் செய்தார். அவரது வாழ்க்கை முழுவதுமே பொதுநலப்பணிகளிலே கழிந்தது. அத்தகைய சிறந்த தொண்டின் திறனை நாம் நாவுக்கரசரின் வரலாற்றில் காணலாம்.

திருவீழிமிழலையில் பெரியதொரு பஞ்சம்ஏற்பட்டு மக்கள் பெரிதும் இடர்ப்பட்டபோது நாவுக்கரசர் ஆற்றிய மன்பதைத் தொண்டின் ( Social Service ) மேன்மையினை

"அல்லார் கண்டத் தண்டர் பிரான்
அருளாற்பெற்ற படிக்காசு
பல்லாறியன்ற் வளம் பெருகப்
பரமன் அடியார் ஆனார்கள்
எல்லாம் எய்தி உண்டகஎன
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
துயர்கூர் வறுமை தொலைத் திட்டார்"

எனப் பெரியபுராணம் எடுத்து விளக்கும் திறம்கண்டு உணர்ந்து இன்புறத்தக்கது.

(தொடரும்)

# சாத்தனர் வழிபாடு

தி. கோ. பஞ்சாபகேசன், திருவிடைமருதூர்.

தமிழக மக்கள் மிகப்பழங்காலந்தொட்டே வழிபட்டுவரும் தெய்வங்களுள் சாத்தனரும் ஒருவர். ''சாத்தனை மகனை வைத்தார்'' (அப்பர்தேவாரம் - திருப்பயற்றூர். 4ம்பாட்டு) மகாசாத்திரன் என்ற பெயர் மாசாத்தன் என மருவியதென்பர். இவர் பாசண்டமாகிய தொண்ணூற்றறு வகைச் சமயச் சாத்திரத்தருக்கக் கோவைகளில் பயிற்சியுடையவராதலின் பாசண்டச்சாத்தர் எனப்படுவரென்பது சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் கருத்து எனத் தெரிகிறது. (சிலப்பதிகாரம் - கனைத்திறம் உரைத்த காதை 14 - 15.)

சாத்தனருக்குக் கோயிலெழுப்பி வழிபடும் வழக்கம் சிலப்பதிகாரத்தில் காணப்பெறுகிறது. இந்நாளில் ஐயன்கோயில் - ஐயனர் கோயில் என்ற பெயருடன் பலகோயில்கள் தமிழகத்தின் சிற்றூர்கள் பலவற்றில் அமைந்துள்ளன. கந்தபுராணத்தில் - ஐயனர் திருவவதாரம் - மகாசாத்தப்படலத்தில் கூறப்படுகிறது.

பண்டைத் தமிழரின் நாகரிகம், ஒழுக்கம், கலைவளர்ச்சி முதலியவற்றை அறிய பெருங்கருவியாயுள்ள இலக்கியங்களுள் சிறப்புடைய சிலப்பதிகாரத்தில் சாத்தனரைப் பற்றிய வரலாறு காணப்பெறுகிறது.

முன்னெரு காலத்தில் மாலதி என்னும் பார்ப்பனி தன்னுடைய மாற்றாள் குழந்தைக்குத் தன் பாலைச் சங்கிலூட்ட, அக்குழந்தை பால் விக்கி அவள் மடியிலே இறந்துவிட்டது. அதனல் மாலதி, தன் மாற்றாளும் கணவனும் தன்மீது பெரும் பழியைச் சுமத்துவர் என்று பயந்து, அக்குழந்தையை ஏந்திக்கொண்டு காவிரிப்பூம்பட்டினத்தில் விளங்கிய கற்பகக்கோட்டம் - சூரியன்கோட்டம் - கைலாயக்கோட்டம் வச்சிரக்கோட்டம் - நிக்கந்தக்கோட்டம் முதலாய கோட்டங்களுக்குச் சென்று, அவ்வக் கோட்டங்களிலுறையும் தெய்வங்களை வணங்கித் தன் துன்பத்தை நீக்கும்படி வேண்டியும், தீராமையால், பாசண்டச்

சாத்தனர் கோயிலிலே பாடுகிடந்தாள். அதுபோது, சுடுகாட்டுக் கோட்டத்திலுள்ள இடு பிணந்தின்னும் இடாகினிப்பேய், இளம்பரு வமுடைய ஒரு பெண் உருவங்கொண்டு, பாடு கிடந்த மாலதியை அணுகி, ''குற்றமற்றவளே, முன்பிறவியில் தவஞ் செய்திலார்க்கு தேவர்கள் அருள்புரியமாட்டார்கள். நீ பாடுகிடத்தலால் பயனொன்று மில்லை'' என்று சொல்லிக் குழந்தையை வாங்கித் தன் வயிறடக்கி மறைந்துவிட்டது. இறந்த குழந்தையின் உடலையும் இழந்த மாலதியின் துயரங்கண்டிரங்கிய பாசண்ட சாத்தனர், அவளை நோக்கி, ''அன்னய், நீ செல்கின்ற வழியில் சோலையினிடத்து அக்குழவி உயிரோடு கிடக்கின்றதைக் காண்பாய்'' என, அவள் சென்று பார்க்க, அவர் குழந்தையாகக் கிடந்தார். மாலதி அக்குழந்தையை எடுத்துச் சென்று அதன் தாயின் கையில் கொடுத்தாள். குழந்தையாகிய சாத்தனரும் வளர்ந்து கல்வி கேள்விகளிற்சிறந்து, தாய் தந்தையரிறந்த பின் பிறகடன் முதலியன செய்து, தாயத்தாருடன் வழக்குரைத்து தேவந்தி என்னும் மனைவியோடு வாழ்ந்தார். பின் தன் மூவா இளநலங்காட்டி, உண்மையைக் கூறி அவள்குறிப்பினை நன்குணர்ந்து, ''நீ எம் கோட்டத்துக்கு வா'' என அவளுக்கு அருளிச் செய்து, பிறர்க்கெல்லாம் ''தீர்த்தத்துறை படிவேன்'' என நீங்கினர்.

இவ்வாறு மாயக்குழந்தையாக வளர்ந்தது **காப்பியக்குடி** என்னும் பதி என்பது, ''காப்பியத்தொல்குடி கவின்பெற வளர்ந்து'' என்னும் **சிலப்பதிகாரம் வரந்தரு காதை 83 ஆம் வரியால்** தெரிகிறது.

சிலப்பதிகாரம் குறிக்கும் இந்தக் காப்பியக்குடி என்னும் ஊர் தஞ்சைமாவட்டம் சீர்காழிக்கு அருகில் உள்ளது. அங்குச் சாத்தனர் கோயில் இன்றும் நின்று சிறப்புடன் விளங்குகிறது.

சாத்தனரைப் பற்றிப் பிரிதொரு வரலாறு **பெரியபுராணம் வெள்ளானைச் சருக்கம் - 52 ஆம் திருபாடலால் தெரியவருகிறது.**

சேரமான் பெருமாள் நாயனரால் அருளிச்செய்யப்பட்டுத் திருக்கயிலாயத்தில் சிவபெருமான் திருமுன்னர் விண்ணப்பிக்கப்பட்ட ஆதியுலாவை (திருக்கைலாய ஞானஉலாவை) மாசாத்தனர் கேட்டறிந்து வந்து நிலவுலகில் திருப்பிடவூரில் வெளிப்படுத்தினர்.

''சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தஅத்
திருவுலாப் புறம் அன்று
சாரல் வெள்ளியங் கயிலையிற் கேட்டமா
சாத்தனர் தரித்திந்தப்

பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில்
வெளிப்படப் பகர்ந்தெங்கும்
நார வேலைசூழ் உலகினில் விளங்கிட
நாட்டினர் நலத்தாலே''

பெரியபுராணம் குறிக்கும் பிடவூர் திருச்சிராப்பள்ளி மாவட்டம் பிரம்பலூருக்குப் போகும் நெடுஞ்சாலையில் செருகனூருக்குப் பக்கத்தில் உள்ளது. வாலிகண்டபுரம் என்னும் ஊருக்கு அருகில் அமைந்துள்ளது.

பழந்தமிழ்நாட்டின் தன்மையையும், தமிழ்நாட்டின் படைத்திறம் பெருவேந்தர்களையும், கொடைமடம் பூண்ட பெருவள்ளல்களையும் கற்றறிந்தடங்கிய சான்றோர்களையும் பழந்தமிழ்க் குடிமக்களின் சிறப்பையும் எடுத்துக் காட்டும் தொகை நூல்களுள் மிகச் சிறந்தது புறநானூறு. அப்புறநானூற்றின் 395 ஆம் பாட்டில்,

''செல்லா நல்லிசை உறந்தைக் குணாது
நெடுங்கை வேண்மான் அருங்கடிப் பிடவூர்
அறப்பெயர்ச் சாத்தன் கிளையேம்'' (பெரும் 19-20 வரிகள்)

பாட்டுடைத் தலைவன் பெயர் சாத்தன் என்று குறிக்கப்படுகிறது.

அதன் அடிக்குறிப்பிலும் ''சோழநாட்டுப் பிடவூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன்'' என்று அவன் பெயர் குறிக்கப் பெற்றிருக்கிறது. அவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருந்த மாசாத்தனார் பெயரையே அப்பாட்டுடைத் தலைவனுக்கு வைக்கப்பட்டிருக்கலாமென்று மகாமகோபாத்தியாய - திராவிடவித்தியாபூஷணம் - தாக்ஷிணாத்ய கலாநிதி - டாக்டர் உ.வே. சாமிநாதஐயரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். அன்றியும் தங்கள் தங்கள் ஊரில் கோயில் கொண்டிலங்கும் குடிக் கடவுளின் பெயரைத் தம் மக்கட்கு வைப்பது அன்றும் இன்றும் தமிழ் மக்களிடத்தில் அமைந்த ஒருமரமாகும். மேற் சொன்ன புறநானூற்றுப் பாடலில் உறந்தைக்குணாது - பிடவூர் என்று பேசப்பட்டிருப்பதாலும், உறையூருக்குக் கிழக்கே பிடவூர் என்ற ஊர் இல்லாமையாலும் இங்குக் கூறப்பட்ட பிடவூரில் ஐயனர் கோயில் சிறப்பாக இன்றும் விளங்குவதாலும், புறநானூற்றுப் பாடலில் கூறப்பட்டதும், பெரியபுராணத்தில் கூறப்பட்டதுமாகிய பிடவூர் இது என்பது தெளிவாகிறது. இப்பிடவூர் முடியுடைவேந்தர்க்கு மகட் கொடுத்தற்குரியராகிய வேளாண்குடி பெருமக்கள் வாழும் இடமாகவும் விளங்கிய பெருமையுடையதாகும்.

''பிடவூர்'' தேவார வைப்புத்தலங்களில் ஒன்றாகும்.

1\. ''தெய்வப் புனற்கெடில வீரட்டமுஞ் செழுந்தண்
பிடவூருஞ் சென்று நின்று

பவ்வந் திரியும் பருப்பதமும் பறியலூர்
வீரட்டம் பாவநாசம்
மவ்வந் திரையுமணி முத்தமும் மரைக்காடும்
வாய்மூர் வலஞ்சுழியும்
கவ்வை வரிவண்டு பண்ணே பாடுங்
கழிப்பாலை தம்முடைய காப்புக்களே''.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்
திருவதிகை வீரட்டானம் - காப்புத்திருத்
தாண்டகம் - 6ம் பாட்டு

2. "ஆரூர்மு லட்டானம் ஆனைக்காகவும் ஆக்கூரில்
தான்தோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேராவூரும் பெருந்துறை
காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறுக்கைவீ ரட்டானமுங் கோட்டூர்
குடமூக்குக் கோழம் பமுங்
காரார் கழுக்குன்றுங் கானப் பேருங்
கயிலாய நாதனையே காண லாமே.''

திருநாவுக்கரசு சுவாமிகள் - க்ஷேத்திரக்
கோவைத் திருத்தாண்டகம் - 2ம் பாட்டு

3. "அம்மானே ஆகம சீலர்க் கருள்நல்கும்
பெம்மானே பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்புல வாணர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி யம்மானே''

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்
திருவாரூர்ப்பரவையுண்மண்டளி
6 ஆம் திருப்பாட்டு

"பேராளன் பிடவூரன" என்று இத்தேவாரத்திலும் பாராட்டப் பெற்ற தலைவன் வாழ்ந்த சிறப்புடையதாகும் பிடவூர்.

ஐயனர்கோயில் என்ற பெயரில் தமிழகத்தில் பலகோயில்கள் பலவேறு இடங்களில் அமைந்திருந்தாலும், அவற்றுட்சிறந்ததாகக் கருதப்பெறுவன மாசாத்தனர் தொன்மையாகவே கோயில்கொண்டிலங்கும் காப்பியக்குடி - பிடவூர் ஆகும்.

இந்நாளில் ஐயப்பன் வழிபாடு கேரளநாட்டில் மிகச்சிறப்பாக போற்றப் பெற்றுவருகிறது. இன்று தென்னாட்டில் கிராமங்களிலும் நகரங்களிலும் பல்லாயிரம் மக்கள் ஐயப்பன் வழிபாட்டை சிலநெறி முறைகளை நியதியாக மேற்கொண்டு, சபரிமலைக்குக் குறிப்பிட்ட காலங்களில் யாத்திரை சென்று வழிபட்டு வருகிறார்கள்.

# காளமேகமும் கவிதைத்தாகமும்

(தொடர்ச்சி)

ம. வே. பசுபதி.

அதற்குப் பின்னே கடுமையான புலமைப் போட்டிகள். காள மேகமே வெற்றி கொண்டான். சில நாட்கள் அங்கேயே தங்கினன். பல பாடல்களில் திருமலைராயனை இணைத்துப் பாடினன்.

நஞ்சிருக்கும் தோல் உரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்தில் பல்பட்டால் மீளாது - விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

என்பன போன்ற சிலேடைப் பாடல்களிலும் திருமலைராயன் புகழைப் பேசினன் என்றாலும் உரிய மரியாதை கிடைக்கவில்லை. மகானுபாவர்கள் மன்னன் மனத்தை விஷப்படுத்திய பிறகு எப்படி மரியாதை கிடைக்கும்?

இவனை ஆதரிக்க ஒரு வள்ளல் இன்னமும் கிடைக்கவில்லை. திறமை மதிக்கப்படாம விட்டால் போகட்டும்; மிதிக்கப்படக் கூடாதல்லவா?

இப்படிச் சிந்திக்கும்போது தனி ஒரு வள்ளலின் ஆதரவின் மையும் அவனின் கடிய வசை வார்த்தைகளுக்கு வேராக அஸ்தி வாரமாக அமைந்தது என்று கண்டு கொள்ள முடிகிறது.

அவனின் வசைப்பாடல்கள் பூராவுமே பசிநேரத்தில் பிறந்த வைதான். மற்ற நேரங்களில் நையாண்டிப் பாடல்கள்! அங்கதப் பாடல்கள், அணிநலப்பாடல்கள்!

கும்பகோணம். இந்த ஊரைக் குடந்தை எனறும் குறிப்பிடுவார் கள். காளமேகப்புலவன் இந்த ஊருக்கு விஜயம் செய்கிறான். வழக்கம் போலப்பசியுடன்தான்! யாரோ ஒருவன், தான் சோறு போடாவிட்டாலும் விருந்து நடக்கும் இடம் ஒன்றைக் கைகாட்டி

விட்டான். பரவாயில்லை. அதுவும் ஒரு புண்ணியம் தான். கம்பீரமாக அங்குச்செல்கிறான் கவிகாளமேகம். பந்திக்கு முந்திக்கொள்ளும் பேர்வழிகள் முன்னதாக இலைகளை ஆக்ரமித்து விட்டார்கள். பந்தி தொடங்கியாயிற்று. ஓர் இலை தாழ்வாரத்தில் கவிஞனுக்காகக் காத்திருந்தது. கவிஞன் அந்த இலையருகில் அமர்ந்தான். தாழ்வாரத்தின் மேடான பகுதியில் கவிஞனுக்கருகில் அமர்ந்திருந்தவன் முன்குடுமி உள்ள ஓர் ஆள். காளமேகம் முதல் உணவைச் சாப்பிடத் தொடங்கினான்.

அந்த முன் குடுமி ஆசாமிக்கு ரசம் பரிமாறுகிறார்கள். அந்த நேரத்தில் அவனுடைய முன் குடுமி அவிழ்ந்து விட்டது. பின் குடுமியாக இருந்தால் நிதானமாக முடிச்சுப் போட்டுக் கொள்ளலாம். முன்குடுமியாயிற்றே. முகத்தையே மறைத்து விடுமே. சாப்பிடுவது எப்படி!

சாப்பிடும் போது முன்குடுமி அவிழ்ந்து விட்டால் முடிச்சுப் போடுவது எப்படி! கடினம்தான் இடது கையால் சிண்டுமுடிந்து கொள்கிறான் வலது கையின் குறைந்த பட்ச உதவியுடன்.

ரசம் போடுகிறவன் அவ்வளவு நேரம் காத்திருப்பானா என்ன? அவன் ஊற்றிவிட்டுப் போய்விட்டான். அணை உடைந்த வெள்ளம் போல் ரசம் இலை கடந்து இறங்கியது. காளமேகத்தின் இலையை நெருங்கியது.

ஆத்திரமும் அருவருப்பும் அடைந்தான் கவிகாளமேகம் பீறிட்டு வந்த சினம் கவி வார்த்தைகளாகிய அணுகுண்டுகளை அள்ளி எறிகின்றது;

“சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா! சோற்றுப்
பொருக்குலர்ந்த வாயா புலையா - திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்

அடேயப்பா! எவ்வளவு கோபம்! ‘உன்தாய்க்கு வேறு வேலை கிடையாது. பூமிக்குப் பாரமாக உன்னைப் பெற்றுத் தள்ளிவிட்டாள்’ என்று விஷவார்த்தைகளால் வைது தீர்க்கிறான்.

அவன் கோபத்திலே நியாயம் இருக்கிறதோ இல்லையோ, உலகத்திற்கு ஒரு பாடம் இருக்கிறது. பந்தி நாகரிகம் பற்றி இந்தப் பாடல் அறிவுறுத்துகிறது. மற்றவர்கள் அருவருக்கின்ற எந்தக் காரியத்தையும் கூட்டமாக உட்கார்ந்து சாப்பிடும் போது, தவிர்த்தாக வேண்டும். பல ஜென்மங்களுக்கு இது புரிவதே கிடையாது. அவர்களை இப்படி வைவதால் தோஷமில்லை.

நாகைக் காரோணத்தில் ஒரு சுவையான நிகழ்ச்சி. அந்த ஊருக்குக் காளமேகம் சென்றபோது காத்தான் சத்திரத்திற்கும் போனுன். சாப்பிடுவதற்காகத்தான். இரவு வெகு நேரத்திற்குப் பிறகுதான் நெல் வந்தது. அதன் பிறகுதான் சமயல் வேலைகளே தொடங்கின. நடுஇரவும் கடந்த பிறகுதான் சோறு போட்டார்கள் கோபம் வராதா என்ன? அந்தக்கோபமே ஒரு வசைப்பாடலாக அவதாரம் செய்தது:

''கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசி வரும் - குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்''

இந்த வசை கொஞ்சம் நிதான நோக்கத்தோடு வெளிவந்த வசையாகும். தருமம் செய்வது மட்டும் பெருமைக் குரியதன்று. தருமம் தக்க நேரத்தில் தக்கவர்களுக்குச் சேர்ந்தாக வேண்டும். பசி நேரத்திற்குக் கிடைக்காத உணவு பயனற்றது.

அர்த்த ராத்திரிக்குப் பிறகு அந்தச் சத்திரத்தில் படைக்கப் பட்ட உணவு அறமாக மதிக்கப்படாது. அதனை அறச்செயல் என்று குறிப்பிடுவதைக் காட்டிலும் அறச்சடங்கு என்று குறிப்பிட லாம். இந்த வசைப்பாடலால் காளமேகம் வற்புறுத்துவதெல்லாம், 'காலந்தால் அறம் செய்யுங்கள்' என்பதைத்தான். திருவள்ளுவனும், கொஞ்சமாக உதவினுலும் உரியகாலத்தில் உதவுங்கள் என்று தானே சொன்னுன்!

'காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

என்பது திருக்குறள்.

அந்தச் சத்திரம் வருணகுலாதிபன் சத்திரம் ஆகும். காளமேகம் வசைப்பாடினுன். என்று கேள்விப்பட்டு, அந்தச் சத்திரச்சொந்தக் காரன் காளமேகத்திடம் வந்து 'தமதரும நிறுவனத்திற்குக் கெட்ட பெயர் ஏற்பட்டு விடும்', என்றும், அந்தப்பாடலை உலகிற்கு அறி விக்கக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டான். பசிதீர்ந்தவுடன் காளமேகத்தின் சினமும் தீர்ந்துவிடும். பசிதீர்ந்த நேரத்தில்தான் இந்த வேண்டுகோள் வந்தது. காளமேகம் சாந்தமாகச் சொன்னுன் நான் உங்கள் சத்திரத்தைப் பற்றி வசை பாடவில்லை. பாராட்டித் தான் சொல்லியிருக்கிறேன். 'காத்தான் சத்திரத்தில் அத்தமிக்கும் போது அரிசிவரும்' என்ற தொடருக்குக் 'கடுமையான பஞ்ச காலத்தும் அரிசிவரும்' என்று பொருள் வைத்துக் கொள்ளுங்கள்.

குத்தி உலையிலிட ஊரடங்கும் என்ற தொடருக்குக் கடலோசை மிகுந்த இந்த நாகையின், ஊர் ஓசையும் மிஞ்சும் அளவுக்கு அதிக அளவில் இங்கே நெல் குத்துகிறார்கள்! என்று பொருள் வைத்துக் கொள்ளுங்கள்! 'ஓரகப்பை அன்னம் இலையிட வெள்ளி எழும்' என்பதற்கு வெள்ளி முளைப்பதைப் போலத் தூய்மையான வெண்மையான அன்னம் படைக்கப் படுகிறது என்று பொருள் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் தருமத்தை நான் வைது பாடவில்லை; வாழ்த்தித்தான் பாடி இருக்கிறேன் என்றான். வசையே இசையானதற்கு இது ஓர் உதாரணம்.

கவி காளமேகத்தைப் பிழிந்து கவிதை பெற்றவர்கள் புகழ் பெற்றதே கிடையாது. அவனே மகிழ்ந்து பாராட்டுவான். 'என்னைப் பாராட்டு' என்று கேட்டவர்களை எப்படியும் பதம் பார்த்து விடுவான்.

திருவண்ணாமலைக் கோயில் நிர்வாகி சம்பந்தாண்டான் வீட்டுக்குக் காளமேகம் செல்கிறான். வீட்டுத்திண்ணையில் மயிர் வினைஞரிடம் சம்பந்தாண்டான் தலையைக் கொடுத்திருக்கும் நிலையில் அவனைக் காளமேகம் சந்திக்கிறான். கவிஞனுக்குப் பசி வயிற்றைக் கிள்ளுகிறது.

'ஐயா! என்பெயர் காளமேகம். நான் கவிஞன். கோயிலுக்கு வழிபாட்டுக்காக வந்தேன். பசிக்கிறது. உண்ண உணவு அளிப்பதால் நன்றி உள்ளவனாக இருப்பேன்.

'வேசிக்குக் காசு கொடுத்து வெறுமனே திரும்புவதா' என்று கூறும் கோஷ்டியைச் சேர்ந்தவன் சம்பந்தாண்டான்.

புலவனுக்குச் சோறு போடுவதிலே அவனுக்குத் தடையில்லை கிடைதற்கரிய புலவன் ஒருவன் வந்திருக்கிறான். அவனைக் கவி புனையச் செய்து கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்று அவன் அபார அறிவுக்குப்பட்டது.

'புலவர் பெருமானே! உமக்குச் சோறு போடுகிறேன். இப்பொழுதே நீங்கள் என்னைப் பற்றி ஒரு கவிதை புனைந்து கூற வேண்டும் என்றான்.

காளமேகத்திற்குச் சங்கடமாகவே இருந்தது. பாடினால்தான் சோறு என்ற கதி ஏற்பட்டு விட்டதே' என்று அவன் மனம் நொந்தது; வசைபாடவல்ல காளமேகத்தின் உள்ளத்தை வதைத்தவன்.

இசை பெற்றதாக வரலாறு உண்டா?

காளமேகம் சம்பந்தாண்டானின் கட்டளைக்கு இசைந்தான்.

"ஓய்! புலவரே! பாட்டென்ருல் உன் விருப்பப்படி பாடிவிடக் கூடாது. பாடல் நான்கு வரிகளாகவே இருக்க வேண்டும்".

"சரி"

"மன்" என்று தொடங்க வேண்டும். "மலுக்கு" என்று முடிக்க வேண்டும்.

"ஊம்"

"என் பெயரும் இவ்வூரின் பெயரும் அப்பாடலில் இருக்க வேண்டும்.

"அதுவும் சரி"

"ஓ ... இன்றுமொன்று"

"என்னவோ?"

"நான் குடுமி களைந்து மொட்டை அடித்துக் கொள்ளும் விஷயமும் உம் பாட்டிலே குறிப்பிடப் பெறவேண்டும்.

"நாலடிக்குள்ளேயே"

"ஆமாம்"

இப்படி அவர்களின் உரையாடல் முடிந்தது. அப்பொழுது, நடுத்தர வயதுள்ள இரண்டு பெண்கள் வீட்டு வாயிலின் வழியாகக் காளமேத்தை எட்டிப்பார்த்தார்கள். காளமேகத்தின் கண்களுக்கு அவர்களின் கழுத்துக்கு அணிசெய்து கொண்டிருந்த மங்கலநாண் பளிச்சென்று தெரிந்தது.

"ஐயாவுக்கு ..." என்று காளமேகம் சம்பந்தாண்டானை நோக்கிப் பேச்சை இழுத்தான்.

"ஆமாம் இரண்டு மனைவிகள்" சட்டென்று முடித்தான் சம்பந்தாண்டான்.

கட்டுப்பாடுகளில் சற்றும் குறையாமல் கவிஞன் கவி சொல்லத் தொடங்கினுன்.

"மன்னும் அருணகிரி வாழ்சம்பந் தாண்டாற்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன்? - மின்னின்
இளைத்தஇடை மாதர் இவன்குடுமி பற்றி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு"

"இவன் ஏன் குடுமியை நீக்கிவிடுகிருன் தெரியுமா? இவன் இரண்டு பெண்டாட்டிக்காரன். அவர்களின் கோபத்தினல் ஒருவர் மாற்றி ஒருவர் இவன் குடுமியைப் பிடித்துக்கொண்டு வசமாகக் குட்டும்போது தாங்கிக் கொள்ள முடியவில்லை. இந்தத் தொந்தரவைத் தவிர்ப்பதற்காகத்தான் மொட்டையடித்துக் கொள்கிருன்' என்ற வேடிக்கையான கருத்தை, அவன் சொன்ன கட்டுபாடுகளுக்கு அடங்கிய கவிதையிலே கொடுக்கிருன். பாடச் சொன்னவன் அவமானத்தால் திண்டாடுகின்ருன்

இந்தக் காளமேகம் பொல்லாத ஆள். எதையும் ஒளிவு மறைவு இல்லாமல் பாடிவிடுகிறன். பிரத்யட்ச வாதத்தின் பிள்ளையார் சுழி இவன்தானே ஏழு வேசிப் பெண்கள் இவன் கவி வாழ்வின் வரலாற்றில் பிணைகிருர்கள். கணக்கில் வராமல் எத்தனையோ?

ஆற்றூரில் சோமி என்று ஓர் அழகி! அவள் சிவப்பு விளக்கு! அவளைக் காளமேகம் பாராட்டுகிறன்!.

"இவள் அழகைப் பார்த்து மயக்கம் அடைந்து திருமால் கீழே விழுந்து கிடக்கிருன். காமம் அதிகமானவர்கள் பனங்கருக்கால் செய்த மடலில் - குதிரையில் ஏறி, தான் எப்பெண்ணின் மேல் காதல் கொண்டார்களோ அவளை, அக்காதலை ஊருக்கு அறிவிப்பார்கள் அதனை மடல் ஏறுதல் என்று இலக்கணக் காரர்கள் - இலக்கிய கர்த்தாக்கள் சொல்வார்கள். நான்முகன் ஆயிரம் மடல் ஏறினன் இந்தச் சோமியால். இவள் அழகைக் கண்டு மன்மதன் ஏங்கி ஏங்கி உருவழிந்தான். இந்த சோமியின் அழகைக் கண்டு ரசிக்க இரண்டு கண்கள் போதாது என்று இந்திரன் ஆயிரம் கண்கள் கொண்டுள்ளான்.

இப்படிச் சோமியைப் பெருமைப்படுத்துகிருன் கவிகாளமேகம். திருமால் கிடந்த திருக்கோலத்தில் இருப்பதையும், பிரமன் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையில் இருப்பதையும், மன்மதன் உருவழிந்திருப்பதையும், இந்திரன் ஆயிரம் கண்களுடன் இருப்பதையும் தற்குறிப்பேற்றமாக "இந்தச் சோமியின் அழகால் தான்" என்று ஆக்கிவிட்ட கவிஞனின் சாமர்த்தியத்தைப் பாராட்டத்தான் வேண்டும்.

"ஆராயும் முத்தமிழ் ஆற்றூரில் சோமி அழகுகண்டு
நாரய ணன்நெடு மாலாகி னன்மற்றை நான்முகனும்
ஓராயி ரம்மடல் ஊர்ந்தான் வில்மாரன் உருவழிந்தான்
பேரான வானவர் கோனும்கண் ஆயிரம் பெற்றனனே.

என்னும் இந்தத் தற்குறிப்பேற்றப் பாடல், அவன் வெள்ளை உள்ளத்தின் வெளிப்பாடு!

''கடவுளே சரணம்' என்று வாய் முணுமுணுத்துக் கொண்டு கள்ள வாழ்க்கை வாழ்பவர்களைக் காட்டிலும் தன் ஆசாபாசங்களை வெளிச்சத்திலேயே எடுத்து வைத்த காளமேகம் எவ்வளவோ மேலானவன்.

தெலுங்கு வேசி ஒருத்திடம் போய் இரவு பூராவும் மொழி புரியாமல் பட்ட பாட்டையும், கவிதையாக அவன் பாடியிருக்கிறான். அவள் அவனை மரியாதைக் குறைவாகப் பேசியிருக்கிறாள். அந்த வார்த்தைகளை மாற்றாமல் அப்படியே கவிதையில் வைக்கிறான். அந்த வார்த்தைகளுக்குப் பொருள் புரிந்துகொள்ள அவன் முயற்சிக்கவே இல்லை. உச்சரிப்புப் பிழையாகவும் சொல்கிறான். அதனாலும், அவன் வேறுயாரிடமும் சொல்லிப் பொருள் அறிந்து கொள்ள முயற்சிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

ஏமிரா வோரி என்பாள் எந்துண்டி வஸ்தி என்பாள்
தாமிராச் சொன்ன வெல்லாம் தலைகடை தெரிந்த தில்லை
போமிராத் சூழும் சோலைப் பொருகொண்டைத் திம்பி கையில்
நாமிராப் பட்ட பாடு நமன்கையில் பாடு தானே!

நம்தேசபிதா, மகான் மகாத்மா காந்திஜியின் சத்ய சோதனையில் உள்ள உண்மைத் தன்மைகளை மதிப்பதைப் போல இப் பாடல்களை நாம் மதித்தாக வேண்டும்.

அவை, அவன் தேவைகள், சட்டரீதியான வாய்ப்புக்கள் இருந்த காலத்தில், அவன் தாகங்கள் தணிந்த வரலாறுகளை அவன் தைரியமாகச் சொன்னான்.

வயதுக்கு வந்தவர்கள் மட்டும் படிக்கத் தகுந்த, இருபதுக்கும் மேற்பட்ட பாடல்களை அவன் பாடினான். சலனமில்லாமல்; தெளிவாக!

''இந்தப் பாடல்கள்தாம், அவன் மரியாதையைக் குறைத்தன'. என்ற வாதம் ஒத்துக்கொள்ளக் கூடியதன்று. பிரத்யட்ச வாதம் என்றைக்கும் தோற்றது கிடையாது. பசிகளை விமர்சித்தவனும், பசியார உண்டதை விமர்சித்தவனும் அசிங்கமானவனா? வேண்டுமானால் பசி அசிங்கமானதாகட்டும்; பசியைப் படைத்தவன் அசிங்கமானவன் ஆகட்டும்.

காளமேகப் புலவனின் கவிதைகளில் பெரும்பகுதியை ''நையாண்டித்தனம்'' அடைத்துக் கொண்டிருக்கிறது என்று கூறலாம். இவன் பாடியதாக நமக்குக் கிடைக்கும் சுமார் 200

பாடல்களில் நூறு பாடல்களுக்கு மேல் இந்த அங்கதம் செறிந்த பாடல்களே.

புராணக் கதைகளையும் இவன் கிண்டல் செய்திருக்கிருன். அந்த விதத்தில் ஒரு புதுமை இருக்கிறது. புராணக் கதைகளைத் தெய்வ-தெய்வீக நிகழ்ச்சிகளைக் கிண்டல் செய்து அங்கதப் பாடல்களைப் பாடினால் பெரும்பாலும் அவை நாத்திகவாதங்களாவே அமைந்து விடும். எப்படியோ தெரியவில்லை, இவனுடைய அத்தகைய பாடல்கள் ஆத்திக எதிர்ப்பாக அமையவில்லை. நாத்திக வாதமாக இல்லாமல் கடவுள் நிகழ்ச்சிகளை அங்கதம் செய்து பாடுவது என்பது மிகக் கூர்மையான கத்தியின் மேல் கால்வெட்டுப் படமால் நடப்பதற்குச் சமமாகும்!

காஞ்சிபுரம் கருட சேவையைப் பாடுகிருன். கவிகாளமேகம்

"பெருமாளும் நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள் - பெருமாள்
இருந்திடத்தில் சும்மா இராமையினல் ஐயோ
பருந்தெடுத்துப் போகிறதே பார்"

கருடாழ்வார்மேல் பெருமாள் கொடுக்கும் காட்சியைப் 'பருந்தெடுத்துப் போகிறது" என்கிருன். இந்த நையாண்டித் தனத்தை வேண்டுமானல் "வைணவ சமயத்திலிருந்து சைவத்திற்கு மாறியவன் இவன் எனவே இப்படிப் பாடினன்" என்று சொல்லி விடலாம்.

காளமேகம், தஞ்சை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் போகிருன். அங்கே சுவாமியின் பெயர் வைத்யநாதர். காளமேகம் கேட்கிருன். "இவன வைத்யநாதன்? இந்தச் சிவபெருமான் குடும்பத்திலேயே அனேகம் வியாதிகள் இருக்கின்றனவே. இவனெப்படி நம் வியாதிகளைத் தீர்ப்பான். தன் குடும்பத்திலிலுள்ள வியாதிகளையே இவனல் தீர்த்து வைக்க முடியவில்லையே" என்று கேட்கிருன்.

"நீரிழிவு, பெருவயிறு, என்ற வியாதிகள் இவன் குடும்பத்திலேயே உள்ளன. ஓ! இவனுக்கே இந்தச்சிவனுக்கே வாதக்கால் எப்படிக் கோணலாக மடங்கிக் கிடக்கிறது பாருங்கள்! இவன் மைத்துனன் திருமாலுக்கு நீரிழிவு நீரிழிவில் மிதக்கிருன். இவன் மூத்தமகனுக்கு வயிறு உப்பிக்கிடக்கிறது".

தொடரும்

# ஞானமிர்தம்

தொடர்ச்சி

இ - ள் பூக்களால் வாசனையுடைத்தான நீரையும் நோக்குதற்கரிதாகிய அசுத்தப் பள்ளத்தின் நீரையும் கதிர் என்னும் வாயாலே மாந்தியும் தனக்கு ஒரு தோடமுமில்லாத ஆதித்தனைப் போலவும் இருளின் நிறத்தையுடைய அகிலும் சந்தனமும் உண்டாரை மரிக்கப்பண்ணும் நஞ்சவர்க்கமும் கண்ணாலே தரிசிக்கும் வர்க்கமாவதல்லது தீண்டுதற்காகாத காஞ்சொறி முதலான பதார்த்தமும் புகையென்னும் கொடியை எடுத்துக் கூடவளைத்துப் பருகிக்கொண்டு துகளாக ஆகருஷித்தும் தனக்கொரு குற்றமற்று ஓங்கும் விட்டு விளங்கா நின்ற ஒளியையுடைய அக்கினியைப் போலவும் பாவபுண்ணிய கன்மங்கட்கு ஏதுவாகிய விடயங்களிலே மூழ்கினும் ஞானஅனலாலே கன்மச்சேதம் பண்ணின முறைமையை யுடையோர் அவையிற்றிற் பந்திக்கப்படாத ஒளிக்கிடமாக விளங்குவர் எ - று.

பொருவியும், எச்சத்திரிபு. ஏ, அசை.

நு. வி: மாந்தியும் - பருகியும். மரிக்கப்பண்ணும் - இறக்கச் செய்யும். ஆகருஷித்தும் — ஈர்த்துக்கொண்டும்.

## பந்த மோக்ஷ காரணம்

46 கரைகாண் கல்லாக் கற்பனை அளக்கர்
வுரைபொரு திரையின் மடிந்தோர் தகுதியும்
மடியாது உயர்ந்த நெடியோர் பகுதியும்
நொடியக் கேண்மோ ஒடியா வாய்மைப்
பார்ப்பன வாகை சூடித் தீத்தொழில்
ஒருமூன்று வளர்த்த அருமறை நாவின்
வேள்வி எடுத்த கேள்வி யாளன்
மனத்தின் மாண்டன்று மாதோ பிறந்தை
இனத்தின் மாண்டோர் ஈடே வேள்வி
ஆசான் முதலிய அத்தொழின் முடிமார்
தேசொடு நிவந்திசிற் பெரிதே உள்ளம்

மாசறக் களைவோர் மாண்பே வேறு
தினகரன் தொழிலும்உண் டவனே தனுஅது
விரிகதிர் பரப்பி விசும்புசெலற் காலைப்
பெரிதுவந் திசினோர் பலரே உவவாது
துனிகூர்ந் திசினோர் நனிமிகப் பலரே
அவரே, இன்ன ராயினுந் தம்முறை இதுவென
உன்னுது ஏகும் அன்னோன் போன்றும்
அரும்பா வியரே மன்ற கரும்பின்
சிலைபொழி கணைபல தைப்ப
நிலைதொலை பெய்தினும் கலைவல் லோரே.

இஃது அஞ்ஞானத்தால் கூடிய மமதை பந்த காரணமென்றும்' ஞானத்தால் மமதைஒழிதல் மோக்ஷ காரணம்என்றும் பாவனை விசேடம் கூறியது.

இ-ள் எல்லை காணுதற்கரிதாகிய சங்கற்பமான சமுத்திரத்திலே எழும் மலைபோன்ற திரையில் அழுந்துவோர் தகைமையும் அதில் அழுந்தாதே நீங்கின பெரியோர் இயல்பும் சொல்லக் கேட்பாயாக. பிறப்புக்குக் காரணமாகிய ஈடணைத் திரயங்களிலே நிரந்தரமாய் மூழ்கினாது சங்கற்பமாகிய செய்தியானது யாகம் பண்ணுவதற்காகச் சங்கற்பித்துக் கொண்ட கெடாத மெய்ம்மையாகிய பார்ப்பன வாகையை யணிந்து ஒன்றுக்கொன்று தொழில் வேறுபாடான அக்கினி மூன்றையும் வளர்த்த அரிய வேதங்களை ஓதும் நாவையும் உபதேசத்தையும் உடைய வைதிக வேதியன் மனத்தாலே இந்த வைதீகக் கிரியையை இயற்றுதலால் வரும் பலத்தைப் புசிப்பானகை என்று சங்கற்பித்துக்கொண்டு இருந்த அழகு போன்றிருக்கும், சித்தத்தினுண்டாகிய கன்மத்தை க்ஷயம் பண்ணின பெரியோர்களது மாண்பாகிய செய்தி. எங்ஙனம் எனில், வேள்வி வேட்பிக்கும் ஆசாரியன் முதலாக அந்த யாகக் கிரியையை முடிக்க ஏவல் செய்வோரனைவரும் அகங்கரியாது செய்வதினாலே அதிற் பலம் போல யாவருமறிய ஒளியுண்டாக ஓங்கிய பெருமையுடைத் தாயிருக்கும். இஃதுஒழிய ஆதித்தன் செயலினும் உளதாகிய வேறொன்றினைக் காட்டலாம். ஆதித்தன் தன்னுடைய விரிந்த கதிரைப் பரப்பி ஆகாயத்திலே இயங்குமிடத்து அவனைக்கண்டு மிகவும் பிரியப்பட்டோர் பலர். அங்ஙனமன்றி

விதனப்பட்டோர் அவரினும் - மிகப்பலர். இவ்விருதிறத்தவரும் இத்தன்மையரான விடத்தும் அவர்கள் ஊழ் முறைமையதுவே யென்று நினையாதே இயங்கும் அத்தன்மையனை ஆதித்தனைப் போன்றும் சாத்திரங்களைக் கற்றுவல்லவரான ஞானவான்கள் காமதேவனுடைய கரும்பு வில்லினின்றும் பொழியப்பட்ட புட்ப பாணங்கள் பலவும் தைக்கப்பட்டு நிலைகலங்குதல் உண்டாயினும் நிச்சயமாக அரிய ஞானபாவத்தை யுடையராயிருப்பார் எ - று.

மோ, மாது, ஓ, ஏ, அசை. நிவந்திசின் என்பதில் இசின், அசை.

நு. வி: மமதை - யான் எனது என்னும் செருக்கு. ஈடணைத் திரயம் - மண், பொன், பெண் ஆசைகள். பார்ப்பனவாகை - மறை ஒழுக்கம் தலைநின்ற பார்ப்பனரை அவர்செய்யும், வேள்வி மிகுதிபற்றிச் சிறப்பித்துக் கூறுவது. தொழில் வேறுபாடான அக்னி மூன்று - ஆகவனீயம் காருகப்பத்தியம், தச்சிணாக்கினியம் என்பன. இவை சதுரம், முக்கோணம், அரைவட்டம் ஆக அமைந்திருக்கும். பிறர் பொருட்டுச் செய்யும் வேள்வி தன்நலம் கருதாது அமைதல் போல ஞானியர் செயலும் தன்நலம் கருதாது அமையும்.

## ஞான சித்தர்க்குத் தேகம் பாரம்

47 வாகை வெண்ணெற்று ஒலிப்பக் கூகை
குழறுகுரல் பல்லியம் துவைப்ப ஓரி
தழங்குகுரன் முரசம் ததும்ப விளிந்தோர்
பிணத்தின் கைவிளக் கெடுப்பக் கூளிக்
கணங்கொள் பேரவை அணங்குநடம் நவிற்றும்
காடுபதி கொண்ட ஒருவன் தரூஉம்
ஆடவன் உள்ளம் கடுப்ப நீடிய
மலப்பொதி இரிய நூறி உரைதொடக்கு
உணர்வொடு கழிந்த இணையில் இன்பத்து
என்றுகொல் எய்துஞான்று என்றே நன்று
நெடிது நினைகுவர் மாதோ
வடுநீங்கு சிறப்பின் வயங்கி யோரே.

இஃது அரும்பாவியர் என்றது குறித்துக்கொண்டு தேக பாரம் ஒழித்தலால் ஞானசித்தர்க்குத் தேகபாரம் தாங்குதற்கு அரிதாயிருக்கும் என்று சொல்லியது.

இ - ள் வாகைமரத்தின் வெள்ளிய நெற்றுப் பறையாகச் சத்திக்கக் கூகைகள் குழறுகின்ற குரல்பல்லியமாக முழங்க ஓரிகள் கூப்பிடுங் குரல் முரசாக அறைய இறந்தோர் உடலாகிய வேகிற பிணத்தின் கையைச் சிலபேய்கள் கவ்வியாடுவதனால் அது விளக்காக எடுத்துக்காட்டப் பேய்க் கூட்டங்கள் கூடின பெரிய ஓலக்கத்திலே ஒருபெண்பேய் கூத்தாடுதலைச் செய்யும் மயானத்தைச் முடிவிடமாகவுடைய ஒருவனது சவத்தைக் கூலிக் காகச் சுமந்துவருகிற புருடன் இதயத்திலே விரைய அப்பிணச் சுமையைப் போகட விரும்பின தன்மைபோலச் சுமந்து வருகிற மும்மலங்களாலான தேகபாரத்தைக் கழியப்போகட்டு மனவாசங் களின் தொடக்கினைக் கடக்கப்பட்ட உவமையில்லாத பரமானந்தக் கடலாகிய முத்தியிற்குளிக்கும் நாள் என்னாளோ என்று மிகவும்நினைத்துக் கொண்டிருப்பர் குற்றமற்றதாகிய ஞான சித்தியால் விளக்கமுற்றோர். எ - று.

ஓடு, மாது, அசை. கொல், ஐயம்.

நு. வி. ஓரி - நரி. போகட - கீழே இட. கழியப் போகட்டு - நீங்கச்செய்து. பிணத்தைச் சுமப்போர்க்கும் அவருக்கும் உள்ள தொடர்பே, உடம்பிற்கும் உயிர்க்கும் உள்ள தொடர்பு என்பது ஞானியர்களின் திருவுள்ளமாகும்.

## ஞானசித்தர்க்கு வினையில் பற்றின்மை

48 நஞ்சு வீற்றிருந்த வெஞ்சினப் பகுவாய்
போர்வை நீத்த புயங்கத் தன்ன
ஆசறு படிவத்து ஆன்றோர் நிற்க
நிலஞ்சேறு படுதத கருங்கைக் கொண்மூப்
பொரியரை விளவின் புனிறுதீர் பெரும்பழம்
அரிதுபெற்று அயின்றதன் வறுமை போலத்
தெரியாத் தேர்ச்சித் தீரா வுள்ளத்துப்
பெரியோர் விட்டனர் பிறழா வினையே
அரியவும் உடையதொன் றுளதே இரியாது

உடனுறை பழைமை வூங்கே கடன்அறி
மண்விளை மாக்கள் தம்விளை முடிமார்
திகிரி யுருட்டி யொருவி யாங்கும்
வருதல் ஓவா மாறுங் குவிவாய்த்
தசும்புறை யிங்காங் கசும்பறத் துடைத்தும்
இருங்கடி இகவாப் பெருங்கடன் அல்லதை
உடையதை யுடையரோ மற்றே உடையதை
வரையளந் தறியாத் திரையருந் திருத்தப்
பேரா னந்தப் புணரி
ஓராங்குப் படிதல் உடையோர் ஈண்டே.

இது தேகபாரத்தைக் கழித்து முத்தியைக் கூடும் நாள் எந் நாள் என்னும் ஞானசித்தர்க்குப் பூருவ வாசனையால் உள்ள அனுபவம் அல்லது அவர் வினையில் பற்றிலர் என்று கூறியது.

இ - ள் வெவ்விய சினத்தையும் நஞ்சுக்குச் சுதேசமாயிருக்கிற பெரிய வாயையுமுடைய தோல்உரித்த பாம்பை ஒத்த புறச் சுத்தி பண்ணின தூய விரதத்தை யுடைய அறிவுடையோர் அழி வின்றியே நிற்க, மதத்தாலே பூமியைச் சேருக்கிய பெரிய கையையுடைய யானை பொரிந்த அடியையுடைய விளாவினது உள்ளே இளம்பருவம் அறப்பழுத்த பெரிய பழத்தை அரிதாக எடுத்துக்கொண்டு புசித்தலால் அதனில் உள்ளொரு பற்றுமின்றி யுளதாந்தன்மைபோலப் பிறரால் அறிதற்கரிதாகிய கன்மச்சேத உபாயத்தைக் கடைப்பிடித்தலின் நீங்காத உள்ளத்தையுடைய ஞானவான்கள் புறச்சுத்தி யின்றியே அந்தரங்க சுத்தியுடைய ராய்க் கெடுத்தற் கரிதாகிய கன்மத்தைச் சேதம் பண்ணியே யிருப்பர், ஆயினும் அவரை விடுதற்கரிதாய் இருந்ததுவும் ஒன் றுண்டு. அஃது அநாதியாகப் பழகிப்போந்த சரீர வாசனை பிராரத்த கன்மம் புசித்தறுமளவும் அஃது ஒழியாது. அஃது எங்ஙனம் என்னில் இவ்விடத்தே தம் கிரியைகளை மிகவும் அறியும் குலாலர் தம் காரியம் முடிப்பான் காரணமாகத் திகிரியை விசைகொளச் சுழற்றி அச்சுழற்று நல் ஒழித்த இடத்தும் சிறிது பொழுது தானே சுழன்று ஓயுமாறு போலவும் குவிந்த வாயையுடைய குடத்தில் இட்டிருந்த பெருங்காயம் அக்குடத்திலே பற்றறத் துடைத்தாலும் மிக்க நாற்றம் அக்குடத்தினின்றும் ஒழியாத பெரிய தன்மைபோலவுமாம். அல்லாமல் அகப்புறப்

பற்ருகிய உயிர்ச்சார்பு பொருட்சார்பில் பற்றுடையார்போல இவர்கள் இருக்குமது பற்ருகவற்ருே? இனி இவருக்கு உடைய தாவது யாதுஎன்னில் எல்லையளத்தற் கரிதாகிய அசைவில்லாத பெரிய ஆனந்த மாக்கடலாகிய தீர்த்தத்திலே இடைவிடாதே மூழ்குதலை யுடையராவர் இந்த எடுத்த சனனத்திலே எ - று

புனிறு - இளமை. ஏகாரங்கள் - அசை. ஐ - சாரியை. ஓ - எதிர்மறை. மற்று - அசை.

நு. வி: சுதேசமாயிருக்கிற - தன்னிடமாயிருக்கிற; குலாலர் - குயவர். பற்ருகவற்ருே - பற்ருக இருக்குமோ? இராது என்ற வாறு.

## உபதேசப் பயன்

49 நஞ்சே பாம்புண் தீநீர் மாதோ
அம்செம் சேதா உண்அறல் அமிழ்தே
விஞ்சை வேந்தர் ஞானம் வீடே
வஞ்சர் ஞானம் வடுவொடு படுமே

இது மேற்கூறிய பக்குவர்க்கும் அபக்குவர்க்கும் செய்யும் உபதேசத்தால் வரும்பயன் கூறியது.

இ - ள் சுவையுடைத்தாகிய தண்ணீர் பாம்பு புசித்தால் நஞ்சாமாறு போலவும் அந்த நீரே அழகிய குணத்தையுடைய செவ்வையாகிய பசுவானது புசித்தால் அமிழ்தத்தை ஒத்த பால்ஆமாறு போலவும் பக்குவராகிய ஞானவான்கள் பெற்ற உபதேசம் முத்திக்கு ஏதுவாய் முடியும். அபக்குவராகிய கிருத்து மர் பெற்ற உபதேசம் பிறரையும் தங்களையும் கெடுத்து உபதேசிக்கின்ற தேசிகர்க்கும் குற்றமாய் முடியும் எ - று

இதனுல் பக்குவா பக்குவம் பார்த்து அனுக்கிரகம் பண்ண வேண்டும் என்பது கண்டுகொள்க. அறல் - நீர். செஞ்சேதா என்றவிடத்து முதற்கண் நின்ற செம்மை குணத்தையும், மற்றது இலக்கணத்தையும் குறித்து நிற்பதால், பண்பைப் பண்பு விசேடித்ததன்று என அறிக. ஏகாரம். நான்கும் தேற்றம். மாது, ஓ, ஒடு, அசை.

நு. வி: கிருத்துமர் - வஞ்சனையுடையார்.

ஏற்புக் குப்பையைப் புள்குலத்து உணவை
நரப்புக் கருவியைத் திரைப்பெருஞ் சேக்கையைப்
புன்புல வாரியைத் துன்புக்கு உறையுளை
ஈருள் போர்வையை வேரின் விளைவைத்
தசைப்பெருந் திரளை நசைக்குஇன் செவிலியை
மூளைச் சேற்றை முழுமலக் குழுவை
ஞாளிக்கு இரையைப் பூளைப் பொதியை
வெண்ணிணப் பெருமையைப் புண்ணின் பொற்பைக்
கொடுமைக் கோதையை அடுசினத் தமலையை
மாசின் தேசை வழும்பின் வைப்பைத்
தோலின் வேலியைத் துகளின் துப்பை
எரிப்பெருங் கொள்ளையை நரிக்குஆர் அயினியை
பெருநோய் அறையைக் கருநரைக் கமத்தைக்
குறும்பிக் கொண்டலை இறும்பற்கு உறைவைக்
புழுப்பா சறையை அழுக்கார் புருவை
பஞ்ச இந்தியப் பாகர்க் காகா
அஞ்சா மதகரி அடவியை வஞ்ச
அரவுவாழ் அளையை நுரைவாய் அருவியை
வாத வழுவைத் தீதுக அணைத்த
வெளிலைப் பித்தின் விளிவருங் குறும்பைக்
குரைவிரி இருமல் திரைவிரி புரையைக்
காமச் சும்மையைக் கவலைக்கு எல்லையை
நாமத்து அரணைத் தீமைத் திறலை
அழுக்காறு அணையும் விழுப்பெருந் தெருவை
ஏமாப்பு இரலை விலங்கலைத் தீமை
இருஞ்சுறவு கலித்த திருந்திரும் பௌவத்தை
மறத்தின் மன்னை வழுக்கின் புக்கிலை

இறப்பின் கேதனம் இதனை மறப்பிற்
கொண்டனை யான்எனக் கொளல்ஒழித்து ஒண்திறல்
மாய வினைய தான தேயாத்
தனுகரண புவன போகம்
எனும்வகை அறிநனி துணியினிது உகவே.

இது மாயாமல பந்தக்ஷயம் கூறியது.

இ - ள் எலும்புக் கூட்டத்தை, பறவை வருக்கத்துப் போசனத்தை, நரம்பென்னுங் கயிற்றாலே கட்டப்பட்டவதனை, திரைதலுக்குப் பெரிய சயனத்தை, புல்லிதாகிய புலாற் கடலைத் துக்கத்துக்குக் குடியிருப்பை, ஈரலை உள்ளேபொதிந்த போர்வையயை, வியர்வைக்கு விளைநிலத்தை, மாங்கிகக் கூட்டத்தை, ஆசையாகிய குழவியை யினிதாகவளர்க்கும் செவிலித்தாயை, மூளைக் குழம்பை சருவ மலத்தின் குழாத்தை, நாய்கட்கு உணவாவதனை பூளைப் பஞ்சு, போலே நிலையில்லாத வற்றாலே கட்டிய பொதியை, வெள்ளையான நிணத்தின்மிகுதியை புண்ணின்பொலிவை, கொடுமையென்னும் துருநாற்றமடிக்கும் பூவால் தொடுக்கப்பட்டதொரு மாலையை, கொல்லுகிறசினத்தின் செறிவை, இராகத் துவேஷங்களை வெளிப்படுத்தும் ஒளியாகிய அதனை நிணத்தாற் பூசப்பட்டகூரையை, தோலை வேலியாகவுடையதனை, குற்றத்துக்கு வலியானவதனை, அக்கினியாலே மிகவும் கொள்ளை கொள்ளப்படுவதனை, நரிகள் திருத்திவரப் புசிக்கும் உணவை, பிறப்புக்குக் காரணமாயிருப்பதோர் அறை வீட்டை, பெரிய நரையாகிய மேகத்தை, அழுக்கைக் குறும்பியாகச் சொரியும் வருடத்தை, உதிரக் கடவ பற்களுக்கு இருப்பிடத்தை, கிருமிகள் புகவிட்டிருக்கும் படைவீட்டை, பொல்லாங்காலே சமைக்கப்பட்ட உருவத்தை, அந்தக்கரண மென்னும் பாகராலே வணக்குதற் காகாத பஞ்சேந்திரிய மாகிய அச்சமில்லாத மதயானை யுலாவும் அடவியை, வஞ்சகமாகிய சர்ப்பம் உறையும் பொந்தை, நுரையை ஒன்பது வாயிலாலே அருவி போலச் சொரிவதனை, வாதமாகிய யானையைக் குற்றமறக் கட்டப்பட்ட கம்பத்தை, பித்தமிருக்கும் கெடுதற்கரிய அரண்இருக்கையை, ஓசைமிக்கிருக்கின்ற சிலேத்துமமாகிய கடலின் அலைவிரியத் தாங்கும் மலையை, மிக்க காமத்தாலே பிறர் பலர் அலர் தூற்றப்படுவதனை, துக்கத்துக்கு முடிவெல்லை யாயதனை, அச்சத்துக்கு இருப்பிடத்தை மெய்யாற் செய்யுந் தீமைக்கு வலிபெற்ற அதனை, பிறர்செல்வம் முதலியவற்றைக் கண்டாற் பொறாமை

சேரும் துன்பத்தையுடைய பெரிய வீதியை, செருக்காகிய மான்வாழும் மலையை, மனத் தோடமாகிய பெரிய சுருமீன் வளரப்பட்ட திரந்திய பெரிய சமுத்திரத்தை, மறத்துக்கு நிலையான அதனை அவனாயம் புகுந்திருக்கும் சுதேசத்தை, சாதற்குக் கொடிகட்டியிருக்கின்றதாகிய இத்தனைக் குற்றமுடைய இத்தேகத்தை, அஞ்ஞானத்தாலே நான் என்று கொண்டாய்; அவ்வாறு கொள்ளுமதனை ஞானத்தாலே விட்டு நான் அல்ல வென்று கொண்டு அழகிய வலியையுடைய மாயாகாரியமான ஒழியாத தனுகரண புவன போகமென்னும் வகைகளின் வேறு பாட்டை உன்னை மிகவும் கூடிய தோடமானது கெட்டுஅற அறிவாயாக எ - று.

துனி, விகாரம். ஏ, அசை.

நு. வி: அவனாயம் - குற்றங்கள்.

## ஆணவமல பந்தக்ஷயம்

51 ஈறுஅறி வுக்குளவன் எவனோ மற்றதன்
மாறுஅறி வுக்குஅறி மற்றே கூறின்
இளைத்தல் மற்றெவன் எவனோ நின்ற
தளிர்த்தன் மற்றுஉயர் பின்மை உளங்கொள
அறிஉரு வதனோடு அநித்தம் அன்மையின்
மறுவறல் நெறிஇவன் எறிபட நின்ற
பந்தம் போகம் போகம் நிறுத்தலும்
வந்தது மாயை வினைமலந் தந்தமின்
மாயை பந்தம் வளங்கெழு போகம்
தேயா வல்வினை திகழ்தரு மலத்துப்
போக நிறுத்துவ தாம்வினை முறுகிய
போகந் தந்து புறங்கொடுத்து இனிதா
ஏகற்கு ஒல்லா தாகி வேகத்து
யாத்தலைத் துடைத்தல்இன் நெறியிறை யுண்மை
பார்த்தலின் பறிமலம் அறுதி கூர்த்த

பிறப்புஇறப்பு அறுஅச் சிறப்புஇல் ஆகத்தில்
வாசனை அகலத் தோசொடு நிவந்த
அமலனைச் சமாதி ப'மல
விமல செய்ம்மதி விருப்பினை இனிதே.

இஃது ஆணவமல பந்தக்ஷயம் கூறியது.

இ - ள் ஆன்மாவுக்குச் சாதல் எவ்வண்ணம் என்றும் அவ்வான்மாவுக்கு அச்சாதலின் மாறுனபிறத்தல் எவ்வண்ணம் என்றும் அவ்வான்மாவுக்கே இளைத்தல் எவ்வண்ணம் என்றும் இளையாமல் பருத்தல் எவ்வண்ணம் என்றும் முப்பதுவயதளவும் வளர்தல் எவ்வண்ணம் என்றும் பின்வளராமை எவ்வண்ணம் என்றும் கேட்கும் நினைந்த இப்பொருள் இருக்கும்படி சொல்லின் உள்ளம்கொள்ள அறிவாயாக. சேதனமாகிய ஆன்மா தேகமாகிய அத்துடன் அநித்தியப்படாமையால் நீகேட்ட பொருள் தேகத்துக்கே என்று கொண்டு தேகிக்கல்லவென்று இவ்வாறு குற்றம் அற அறிந்து போகடு, இது பசுவுண்மை அறிகை, இங்ஙனம் முறையாக நின்று, அனுபவிக்கும் துக்கமும் சுகமும் இச் சுகதுக்கங்களைத் தற்சொரூபம் அறியாமல் மறைத்துப் புசிப்பித்தலும் உண்டாகியது முறையே மாயாமலத்தாலும் கன்மமலத்தாலும் ஆணவமலத்தாலும் ஆம் காண். இனி மேலே சொல்லப்பட்ட நித்தியமாயிருக்கிற மாயாமல காரியமான தேகத்திலே நின்று முற்பவத்திற் செய்து கொண்டதாகிய கெடாத வலிதாகிய கன்மமலத்தால் வளப்பமுடையவான சுகதுக்கங்களை விளங்குகின்ற மலமானது மறைத்துப் புசிப்பிக்கும் அதுதான் பக்குவப்பட்ட கன்ம பலங்களைப் புசிப்பித்து உன்னைவிட்டு நீங்குதற்கு இசையாதே அகங்காரத்தாலே பந்தித்தலை இனிய கன்மச்சேத உபாயத்தாலே தவிர்வாயாக. இது பாசமறைப்பு விடுகை. பதியுண்மை யறிவால் ஆணவமலத்தைக் கெடுப்பாயாக அநாதியாகமிருக்க பிறந்திறந்து வரும் வருத்தத்தைத் தருவதாகிய தேகத்தில் பிரார்த்த கன்ம பலம் புசித்தறு மளவும் மிகவும் சுத்தமான விருப்பத்துடனே பிரகாசமாய் ஓங்கிய நின்மலனை நீ இனிதாகச் சமாதி பண்ணி யிருப்பாயாக எ - று.

இது பதியுண்மை அறிந்து அதனோடு இயைந்திருக்கை, மற்றெல்லாம் கிளவிகள் வினைமாற்று, அமலம், விமலம் — ஒருபொருட் பன்மொழி. ஐ, சாரியை.

நு. வி: தேகி - உடலையுடையது ; அறிந்துரோபகு - அறிந்து கொள் .

## ஞானவான்களைப் பாசம்வாதியாமை

52 பதிபசு பாச மதியோர் வரத!
உலையா என்பதைத் தலைநனி நிறீஇ
உடையா தாயின் ஒருபெரும் பாசம்
அடையா வீடுஎனக் கடைநனி கழறின்
தன்னுரை மலவும் முன்பின் மலவும்
அன்னவை அருளோய் ஆம்எனில் பன்னிய
உடையா மாண்டவர் அடையா மொடிபட
மாமலை யன்ன மரந்தெறுங் கடுங்கனல்
தாமரை யன்ன தளிர்க்கை தாங்கினும்
மதிர மாக்கட்கு அந்தரம் யாதே
செம்பிது செறிந்த புன்புறக் களங்கம் இது
என்றுஉரை கூடா எழில்வளர் சீருணம்
சித்துநீர் செறிந்தது ஒத்தே மிக்க
விடங்கெழு பெருவலி உளங்கொள் மந்திரத்து
அடங்கிய தன்மையும் அற்றே குடங்கர்க்
கலங்குநீர் இல்ல நலங்கிளர் விழுக்காழ்
அணைந்த மாறெ்ன இணங்குஇறந்து அகன்ற
பாசப் பெருவலி தடுத்தனர்
மாசில் ஞான மன்பெருந் தகையே .

இது பாசம் நித்தியமும் வியாபாகமும்மாயிருப்பினும் ஞான வான்களை வாதியாது என்று கூறியது .

இ - ள் ஞானவான்களுக்குச் சிரேட்டமாயுள்ள ஞானகிரி யனை பதியும் பசுவும் பாசமும் நித்தியம் என்னுமதை முன்பே மிகவும் அருளிச்செய்து வைத்துப் பின்பு உவமையில்லாத மகத் தாகிய பாசச்சேதம் இல்லாவிடத்து முத்தி சித்தியாது என்று

மிகவும் அருளிச் செய்வாயேல், அருளையுடையோனே அவ்வசனங்கள் சுவவசன விருத்தமும் சாத்திரத்துக்குப் பூருவாபர விருத்தமுமாய் இருந்தனவல்லவோ ? என்பாயாகில், இங்ஙனம் சொல்லப்பட்ட முப்பொருளும் நித்திய வியாபகங்களே அவையிற்றிற் பாசங்களானவை மாட்சிமையுடையவரான ஞானவான்களை வாதிக்க மாட்டாவாம். என்போல வென்னில்? பெரிய பருவதத்தைப் போலத் திரண்டு உயர்ந்த மரத்தைப் பொடியாகச் சுட்டெரிக்கும் மிக்க நெருப்பைத் தாமரைப்பூவின் இதழ் போன்ற மெல்லிய கையிலே தரித்தாலும் மாந்திரிகருக்குக் கேடாகிய விதனம் யாதாயினுமுண்டோ? மந்திரவாதிகளை அக்கினி வாதியாமையல்லது மற்றுள்ள விதனம் நீங்காமையால், பாசம் வாதியாமையல்லது சுத்தராவதில்லை யாலோ? என்று வினவில், செம்பு இதுவென்றும், இதனுடன் கூடிய புறத்தே விளங்கும் புல்லிய களிம்பு இதுவென்றும் பிரித்துச் சொல்லுதற்கரிய அழகு மிகுந்த செம்பிலே இரதம் செறிந்தால் பொன்னனவாறு போலச் சுத்தனவான் என்று அருளிச்செய்ய உருக்கினல்லது சுத்தமாகாதபடியாலே, வியாபகமான ஆன்மாவுக்கு ஏகதேசமான தேகத்தில் பாசச்சேதம் செய்தவாறு எவ்வண்ணம் என்ன, உள்ளத்திலே மந்திரத்தைத் தியானிக்கத் தேகமுற்றும் வியாபித்த மிக்க நஞ்சினிடத்துப் பொருந்திய பெரிய சத்தியானது பாதாதிகேசமளவும் கலவாமல் தடுப்புண்டவாறு போலவாம் என்று அருளிச்செய்ய நித்திய நோய்கள் சரீரியாவான் உடையன வாதலால், இவை தோற்றின காலங்களில் ஞானத்தையே குறித்துக் கொண்டிருக்க ஒண்ணாமையால், மந்திரம் தியானியாத பொழுது நஞ்சு வாதிக்கு மாறுபோல ஞானமும் இவனுக்குச் சித்தியாக மாட்டாதோ? எனின் குடத்திலெடுத்த மண்ணீரானது தேற்றின் மரத்துண்டாகிய அழகு விளங்கிய சிறந்தவிதையைபிட்டுத் தேற்றின பின்பு மறித்துக் கலங்கினும் தேற்றாமலே தெளியுமாறு போலே குற்றமற்ற ஞான அனலாலே ஞானிகளும் உவமையில்லாத மகத்தாகிய பாசத்தினுடைய பெரிய சத்தியைச் சேதம் பண்ணின பின், பிராரத்த கன்மம் புசித்தற்கேதுவாகிய நித்திய நோய்கள் கலியினும் தெளிவுக்காட்சி யுடையராயிருப்பர் பெருந்தன்மை யுடையோனே! அறிக எ - று.

காழ் - வித்து. ஏகாரம் - தேற்றம். அற்று - குறிப்புமொழி. ஏ, மன் - அசை.

நு. வி: சுவவசன விருத்தம் - தன்கூற்றுக்கே மாறுபாடு. பூருவாபர விருத்தம் - முன்னுக்குப் பின் முரண். சித்துநீர் - பாதரசம். இல்லம் - தேற்றாமரம். இணங்கு - ஒப்பு.

பாசச்சேதம் முடிந்தது

ஆயுள் சந்தா செலுத்தினால்

## ஓர் அன்பளிப்பு

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு

ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினால்

ரூ. 55 மதிப்புள்ள

## கந்தர் கலிவெண்பா

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா

பிரபல இசையறிஞர் சேலம்

டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்

இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ. 25-ம் அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி இசைத்தட்டைப் பெறலாம்.

பி. ஆ-ர்

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

# ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

## சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரூ 125-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ 225-00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரூ 10-00 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. 13-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 15-00 |

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீகுமரகுருபரர்"
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள் 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் முத்து. மெய்கண்டதேவன்,
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

**Posted at Sub-Post Office at Tirupanandal**
*612604*

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

...சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி. ஏ.,
...தியாகராஜ விலாசம்,
62, பிள்ளையார் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.